விலை: 50.00
பக்கங்கள் : 16

website : www.valampurii.lk
viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 25
ஒலி 360 வள்ளுவர் ஆண்டு 2055 கார்த்திகை 28 வெள்ளிக்கிழமை (13.12.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829







சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு

## யாழ்.போதனாவுக்கு விஜயம்

(யாழ்ப்பாணம்)

கொழும்பிலிருந்து சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவைச் சேர்ந்த வைத்திய நிபுணர்கள் குழாமொன்று நேற்று யாழ்ப் பாணம் போதனா வைத் தியசாலைக்கு விஜயம் செய் 15



## காய்ச்சல், உடம்பு வலி, மூட்டுவலி கண்சிவத்தல், சிறுநீர் கழிப்பில் குறைபாடு

### உடனடியாக வைத்தியசாலையை நாடுமாறு எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

எலிக்காய்ச்சல் யாழ்ப்பாணத்தில் வேகமாகப் பரவி வருகின்றது. இது தொடர்பில் பொதுமக்கள் எச்சரிக் கையை இருக்குமாறு பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் பொது மருத்துவ நிபுணர் செல்லத்துரை பிரசாந் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் பருத்தித்துறை வைத்தியசாலை மருத்துவ நிபுணர் வெளியிட்டுள்ள செய்தியில்,

இதுவரை பருத்தித்துறை வைத் தியசாலையில் மட்டுமே 5 பேர் உயிரிழந்துள்ளனர். 15

# எலிக்காய்ச்சலால் பாதிக்கப்பட்ட 44 பேர் சிகிச்சை பெறுகின்றனர்

## சுகாதாரப் பணிப்பாளர் கேதீஸ்வரன்

- இதுவரை 7 இறப்புக்கள் இடம்பெற்றுள்ளன.
- பருத்தித்துறை, கரவெட்டி, சாவகச்சேரியில் அதிகளவு தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.
- விவசாயிகள், மீன்பிடித் தொழிலாளர்கள், துப்புரவுப் பணியாளர்களுக்கு பரவ வாய்ப்பு.

(02ஆம் பக்கம் பார்க்க)



கொழும்புத்துறையில்

## விபரீத முடிவெடுத்த 19 வயது யுவதி மரணம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கொழும்புத்துறையில் விபரீத முடிவெடுத்த 19 வயது யுவதி ஒருவர் மரணமடைந்துள்ளார்.

அப்பகுதியைச் சேர்ந்த 19 வயது 15

## யாழ்.சிறை கைதி மரணம்

### நீதிமன்றம் அழைத்து வரப்பட்டபோது சம்பவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நீதிமன்றத் துக்கு சிறைச்சாலை உத்தி யோகத்தர்களால் அழைத்து வரப்பட்ட சிறைக் கைதியொருவர் மயங்கி விழுந்து உயிரிழந் துள்ளார்.

நாவற்குழி ஐயனார் கோவிலடியைச் 15

## இலங்கை - இந்திய மீனவர் பிரச்சினைக்கு மனிதாபிமான அணுகுமுறை அவசியம்

### இந்திய உயர்ஸ்தானிகர் கடற்றொழில் அமைச்சரிடம் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை - இந்திய மீனவர் பிரச்சினைக்கு மனிதாபிமான அணுகுமுறை அவசியமானது என இலங்கைக்கான 15



கிளிநொச்சி உழவனூர்ப் பகுதியில்

## ஆற்றில் மீன் பிடிக்க சென்ற குடும்பஸ்தர் பலி

(கிளிநொச்சி)

கிளிநொச்சி தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உழவனூர் பகுதியில் சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தில் பணி புரியும் உத்தியோகத்தரான கணேசமூர்த்தி குலேந்திரன் (வயது-33) 15

## அல்வாயில் சடலம் மீட்பு

(யாழ்ப்பாணம்)

அல்வாய் மேற்கு ஆண்டாள் தோட்டம் பகுதியிலுள்ள வீடு ஒன்றில் தனிமையில் வசித்து வந்த வயோதிபர் ஒருவர் உயிரிழந்த நிலையில் நேற்று வியாழக் 15

## ஊழல் மற்றும் மோசடிகளை கட்டுப்படுத்த ஒத்துழைப்போம்

### ஜனாதிபதியிடம் கனேடியத் தூதுவர்

(கொழும்பு)

நாட்டில் ஊழல் மற்றும் மோசடிகளைக் கட்டுப் படுத்துவதற்கு முன்னெடுக்கப்படும் வேலைத் திட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவதாகக் 15





எலிக்காய்ச்சல் பாதுகாத்து கொள்வது எப்படி?

14ஆம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு

# பாராளுமன்ற உறுப்பினர் ஸ்ரீ பவானந்தராசா விஜயம்



(கரணவாய்)

காய்ச்சல் காரணமாக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நோயாளர்களை பாராளுமன்ற உறுப்பினர் மருத்துவர் எஸ். ஸ்ரீ பவானந்தராசா நேற்று(12) சென்று பார்வையிட்டார்.

வைத்தியசாலைக்கு திடீர் விஜயம் மேற்கொண்ட அவர் சுகாதார அதிகாரிகள், வைத்திய அதிகாரிகள், பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளரையும் சந்தித்துக் கலந்துரையாடினார்.

மேலதிக விடயங்கள் மற்றும் மேலதிக ஆளணிகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

மேலும் அங்குள்ள ஒரு விடுதியை காய்ச்சலுக்காக மட்டும் பயன்படுத்த ஏற்பாடும் செய்யப்பட்டுள்ளது. பொது மக்கள் சுகாதாரப் பகுதியினரின் அறிவுறுத்தல்களிற்கு அமைய செயற்படுமாறும் அவர் தெரிவித்தார். (ம-7,60)

# யாழில் இரு நாட்களாக பெய்த மழை காரணமாக
## 17 பேர் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் இரு நாட்களாக பெய்து வரும் மழை காரணமாக 5 குடும்பங்களை சேர்ந்த 17 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என யாழ்ப்பாண மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் பிரதிப் பணிப்பாளர் ரி.என் சூரியராஜா தெரிவித்துள்ளார்.

அந்தவகையில், வேலணை பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட ஜே/14 கிராம சேவகர் பிரிவில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த ஐந்து பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் வீடு ஒன்றும் பகுதியளவில் சேதமடைந்துள்ளது.

அதேபோல சங்கானை பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட ஜே/165 கிராம சேவகர் பிரிவில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த மூன்று பேரும், ஜே/178 கிராம சேவகர் பிரிவில் ஒரு குடும்பத்தை சேர்ந்த ஆறு பேரும் பாதிக்கப்பட்டுள்ளதுடன் வீடுகள் இரண்டும் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட ஜே/144 கிராம சேவகர் பிரிவில் ஒரு குடும்பத்தை சேர்ந்த இரண்டு பேரும், ஜே/147 கிராம சேவகர் பிரிவில் ஒரு குடும்பத்தை சேர்ந்த ஒருவரும் பாதிக்கப்பட்டுள்ளதுடன் இரண்டு வீடுகளும் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. (ம-7)

# 440 மெற்றிக் தொன் அரிசி இந்தியாவிலிருந்து இறக்குமதி

(கொழும்பு)

இந்தியாவிலிருந்து கடந்த 9 ஆம் திகதி முதல் நேற்று வரை 440 மெற்றிக்தொன் அரிசி தனியார் துறையினால் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாக இலங்கை சுங்கம் தெரிவித்துள்ளது.

உள்நாட்டு சந்தையில் நாட்டரிசி உள்ளிட்ட பலவகையான அரிசிக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டை நிவர்த்திப் பதற்காக, அரிசியை இறக்குமதி செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

அதற்கமைய இறக்குமதி அனுமதிப்பத்திரம் இன்றி, அரிசியை இறக்குமதி செய்வதற்கு எதிர்வரும் 20 ஆம் திகதிவரை தனியார் துறையினருக்கு அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது.

அதேநேரம், அரிசிக்கான அதிகபட்ச விற்பனை விலையை நிர்ணயித்து நுகர்வோர் விவகார அதிகார சபையினால் அதிவிசேட வர்த்தமானியும் வெளியிடப்பட்டுள்ளது. (ம-7)

# பங்குச் சந்தையில் வரலாறு காணா மாற்றம்

இலங்கை வரலாற்றில் முதல் தடவையாக கொழும்பு பங்குச் சந்தையின் பங்கு விலைச் சுட்டெண் 14,000 புள்ளிகளைத் தாண்டியுள்ளது.

இதற்கமைய நேற்றையநாள் முடிவில் அனைத்து பங்கு விலை குறியீடு 116.64 புள்ளிகள் அதிகரித்து 14,001.73 புள்ளிகளாக உள்ளது.

அத்துடன் S&P தரப்படுத்தல் குறியீடு 42.80 புள்ளிகளால் அதிகரித்து 4,186.80 புள்ளிகளாக பதிவாகியுள்ளது.

இதேவேளை நேற்றைய நாளுக்கான மொத்த பரிவர்த்தனை அளவு 7.35 பில்லியன் ரூபா ஆகும். (ம-7)

# அளவெட்டியில் கிணற்றிலிருந்து குடும்பஸ்தர் சடலமாக மீட்பு

அளவெட்டிப் பகுதியில் கிணற்றிலிருந்து குடும்பஸ்தர் ஒருவரது சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளது.

இதில் அளவெட்டி, கணேசபுரத்தைச் சேர்ந்த அப்புக்குட்டி பத்மநாதன் வயது 65 எனும் 4 பிள்ளைகளின் தந்தையே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

பிரஸ்தாப நபரை நேற்று முன்தினம் முதல் காணவில்லை என உறவினர்களால் தெல்லிப்பளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டிருந்த நிலையில் நேற்றிரவு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சம்பவ இடத்துக்கு வருகை தந்த தெல்லிப்பழைப் பொலிஸார் சடலத்தை உடற்கூற்று பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தனர்.

மரணம் தொடர்பிலான விசாரணைகளை யாழ்.மாவட்டதிடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (ம-7)


பல ஆயிரம் கடந்த பதிவுகள்

பல நூற்றுக்கு மேற்பட்ட திருமணங்களை பொருத்திய சாதனைகள்

உங்கள் கல்யாண மாலை

சர்வதேச இலவச திருமண சேவையை உலகின் எப்பாகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ள

www.kalyanamalai.lk

இணையத்தளத்தைப் பாருங்கள்

பதிவுக்கட்டணம் ரூபாய் 4,000/=





தொடர்புகளுக்கு :-

கல்யாண மாலை

இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

Email : kalyanamalai.jaffna@gmail.com


## எலிக்காய்ச்சல்...

தற்போதைய சூழலில் பரவிவரும் காய்ச்சல் நிலைமை தொடர்பில் யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி ஆ.கேதீஸ்வரனால் வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையில்,

யாழ்ப்பாண மாவட்டத்தில் தற்போது பரவிவரும் ஒருவிதமான காய்ச்சல் காரணமாக இதுவரை 44 பேர் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். தற்போது இக்காய்ச்சல் காரணமாக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையிலும் யாழ். போதனா வைத்தியசாலையிலும் 32 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர். மேலும் இக் காய்ச்சல் காரணமாக இதுவரை 7 இறப்புக்கள் ஏற்பட்டுள்ளன.

நோயாளர்களிடமிருந்து கொழும்பு மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்திற்கு அனுப்பப்பட்ட மாதிரிகளில் இருவருக்கு எலிக்காய்ச்சல் இருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

எனவே தற்போது மேற்படி காய்ச்சலை எலிக்காய்ச்சலாக கருதி சிகிச்சைகளும் தடுப்பு நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன, இக்காய்ச்சல் தற்போது பரவிவரும் பருத்தித்துறை, கரவெட்டி, சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் ஒருநாள் காய்ச்சலாக இருந்தாலும் உடனடியாக அருகில் உள்ள அரச வைத்தியசாலையை நாடும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இப்பிரதேசத்திலுள்ள வைத்திய சாலைகளில் இந்நோய்க்கு சிகிச்சை வழங்குவதற்கான மருந்துகள் வழங்கப்பட்டுள்ளன. இவ்விடயம் சம்பந்தமாக சுகாதார வைத்திய அதிகாரிகளால் ஒலிபெருக்கி மூலம் பொது மக்களுக்கு அறிவிக்கப்படுகின்றது. மேலும் பிரதேச செயலாளர்களின் உதவியுடன் கிராமமட்ட உத்தியோகத்தர்கள் மூலமாக பொதுமக்களுக்கு இவ்விடயம் சம்பந்தமாக விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகின்றது.

எலிக்காய்ச்சல் நோய் ஏற்படக்கூடிய ஆபத்து இலக்கினர்களான விவசாயிகள், மீன்பிடித் தொழிலாளர்கள், துப்பரவுப் பணியாளர்கள் போன்றவர்களுக்கு இந்நோய்க்கான தடுப்பு மருந்து வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. விவசாயத் திணைக்களத்தின் பிரதேசமட்ட உத்தியோகத்தர்களின் உதவியுடன் கிராமமட்டத்தில் விவசாயிகளுக்கு தடுப்பு மருந்துகளை வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்நோய்ப்பரம்பலை ஆய்வு செய்து ஆலோசனை வழங்குவதற்காக மத்திய சுகாதார அமைச்சின் தொற்றுநோய்த் தடுப்பு பிரிவிலிருந்து வைத்திய நிபுணர்கள் குழுவொன்று யாழ்ப்பாண மாவட்டத்திற்கு வருகை தந்துள்ளது. அவர்கள் வைத்தியசாலைகளிலும் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகளிலும் கள ஆய்வுகளை மேற்கொண்டு உரிய ஆலோசனைகளை வழங்குகின்றனர். மேலும் இந்நோய்க்கு சிகிச்சை அளிப்பதற்கான ஒருதொகுதி மருந்துகள் சுகாதார அமைச்சின் மருத்துவ வழங்கல் பிரிவினால் யாழ்ப்பாண மாவட்டத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7,33)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org


# பயிர் சேதங்கள்

# ஹெக்டேயர் ஒன்றுக்கு ஒரு இலட்சம் ரூபாய் இழப்பீடு

## விவசாய பிரதி அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

**விவசாயிகளுக்கு ஏற்பட்ட பயிர் சேதங்களுக்கு ஹெக்டேயர் ஒன்றுக்கு ஒரு இலட்சம் ரூபா பூரண இழப்பீடு வழங்குவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என விவசாய மற்றும் கால்நடை பிரதி அமைச்சர் நாமல் கருணாரத்ன தெரிவித்துள்ளார்.**



ஊடகங்களுக்கு கருத்து தெரி வித்த அவர், விவசாய நிலத்தை தயார் செய்வதற்காக பிரதேசத்தில் உள்ள அரச நிறுவனங் களின் ஆதரவைப் பெறுவத ற்கு விவசாயிகளுக்கு சந்தர்ப் பம் வழங்கப்பட்டுள்ளது.

பேரிடர்களால் பாதிக்கப் பட்ட விவசாய நிலங்களின் அளவு, அழுத்தத்தில் உள்ள விவசாயக் குடும்பங்களின் எண்ணிக்கை என அனைத் தும் தற்போது மதிப்பிடப்பட்டு வருகின்றன.

அதன்படி, சேதமடைந்த விளைநிலங்களுக்கு விவ சாயிகளுக்கு ஹெக்டேயரு க்கு ஒரு லட்சம் ரூபாய் முழு இழப்பீடு வழங்க அரசு கடமைப்பட்டுள்ளது.

விளைநிலங்களைத் தயா ரிக்கும் போது தற்போதுள்ள சுற்று நிருபங்களைப் பற்றி சிந்திக்காமல் புரிந்துணர் வுடன் செயற்படுமாறு உத்தி யோகத்தர்களுக்கு அறி வுறுத்தப்பட்டதாக விவசாய மற்றும் கால்நடை பிரதி அமைச்சர் நாமல் கருணா ரத்ன தெரிவித்தார். (நி-8)

# உணவுப் பொருட்களின் விலைகள் அதிகரிப்பு

(கொழும்பு)

கடந்த காலங்களுடன் ஒப் பிடுகையில் உணவுப் பொருட்க ளின் விலைகள் சுமார் 20 வீதத்தால் அதிகரித்துள்ளதாக நுகர்வோர் உரிமைகள் பாது காப்பு அமைப்பின் தலைவர் ரஞ்சித் விதானகே தெரிவித்துள் ளார்.

அதற்கான தீர்வை அரசாங் கம் இதுவரையில் வழங்க தவறி யுள்ளதாக அவர் சுட்டிக்காட்டி யுள்ளார். சமகால அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததன் பின்னர் கடந்த அரசாங்கங்களின் பெரும் திருடர்கள் பிடிபடுவார்கள் என மக்கள் எதிர்பார்த்தனர்.

ஆனால் இதுவரை பெரும் திருடர்கள் குறித்த எந்தத் தகவ லும் கிடைக்கவில்லை.

அரிசி மாபியாவை ஜனாதி பதி தனது பேச்சின் மூலமும் செயற்பாடுகளாலும் நிரூபிக்க வேண்டும்.

இது தொடர்பில் இந்நாட்டு மக்கள் உன்னிப்பாக அவதானம் செலுத்தி வருவதாகவும் நுகர் வோர் உரிமைகள் பாதுகாப்பு அமைப்பின் தலைவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி-8)

# தேங்காய் எண்ணெய் உற்பத்தி நிறுத்தம்

(கொழும்பு)

நாட்டில் தேங்காய் விலை சடுதியாக அதிகரித்துள்ளதன் காரணமாக உள்ளூர் தேங்காய் எண்ணெய் உற்பத்தி நிறுத்தப் பட்டுள்ளதாக தகவல் வெளி யாகியுள்ளது.

குறித்த விடயத்தை அகில இலங்கை பாரம்பரிய தேங்காய் எண்ணெய் உற்பத்தி நிறு வனத்தின் பிரதான இணைப்பா ளர் புத்திக டி சில்வா தெரிவித் துள்ளார்.

இரசாயன உரங்களைத் தடை செய்தமையால் தேங்கா யின் உற்பத்தியில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாகத் தென்னைப் பயிர்ச்செய்கை சபையின் யாழ்ப் பாணம், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களுக் கான பதில் பிராந்திய முகாமை யாளர் ஈஸ்வரன் சற்குணன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் குறித்த விடயத்தைத் தெரிவித் துள்ளார்.

அத்துடன், தென்னை பயிர்ச் செய்கையின் வீழ்ச்சிக்குப் பீடைக ளின் தாக்கமும் காரணமாக விளங்குவதாக அவர் குறிப்பிட் டுள்ளார். (நி-8)

# தேசியப் பட்டியல் உறுப்பினர்களின் பெயர்களை வெளியிட்ட ஐ.ம.ச

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சக்தியின் தேசியப்பட்டியலில் பாராளுமன்ற உறுப்பினர்களின் பெயர்கள் வெளியிடப்பட்டுள்ளன.

அதன்படி மனோகணேசன், நிஸாம் காரியப்பர், சுஜீவ சேனசிங்க, மொஹம்மட் இஸ்மாயில் முத்து மொஹம்மட் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

கட்சியின் பொதுச் செயலாளரால் இந்தப் பெயர்கள் தேர்தல் ஆணைக்குழுவுக்கு அனுப்பப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக் கது. (நி-8)

# சபாநாயகருக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை

(கொழும்பு)

சபாநாயகருக்கு எதிராக நம் பிக்கையில்லா பிரேரணையை கொண்டு வர உள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா தெரிவித்துள்ளார்.

சபாநாயகர் அசோக சபுமல் ரன்வலவின் கல்வித் தகுதியின் நம்பகத்தன்மையை தெளிவு படுத்தத் தவறினால், அவருக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரே ரணையை கொண்டு வருவது குறித்து ஆலோசித்து வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் சபாநாயகரின் கலாநிதி பட்டம் தொடர்பில் தேசிய மக்கள் சக்தி அல்லது சபாநாயகர் விளக்கம் அளிக்க வேண்டும் என அவர் சுட்டிக்காட்டியுள் ளார்.

அவ்வாறு செய்யாவிட்டால் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கூடி கலந்துரையாடி சபாநாயகருக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரே ரணையை கொண்டு வருவோம் என அவர் தெரிவித்தார். (நி-8)

# மகிந்தவின் பாதுகாப்பு அதிகாரிகளை தட்டித் தூக்கியது அநுர அரசு



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜ பக்ஷவின் பாதுகாப்பை நீக்குவதற்கு தற் போதைய அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாக சட்டத் தரணி மனோஜ் கமகே தெரிவித்துள்ளார்.

பொதுஜன பெரமுன கொள்கை மையத் தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப் பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள் ளார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்புப் பிரிவினருக்கு வழங்கிய கடிதம் மூலம் பிரதி பொலிஸ் மா அதிபர் அறிவித்துள்ளதாக சட்டத் தரணி ஊடகவியலாளர் சந்திப்பில் குறிப்பிட் டார்.

இதன்படி, முன்னாள் ஜனாதிபதியின் பாதுகாப்பிற்காக நியமிக்கப்பட்டிருந்த 116 பாதுகாப்பு உத்தியோகத்தர்களை அந்தப் பாதுகாப்புப் பிரிவில் இருந்து நீக்க நடவ டிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இவ்வாறான நிலையில், முன்னாள் ஜனாதிபதியின் பாதுகாப்பு மற்றும் அது தொடர்பான நடவடிக்கைகளுக் காக மொத்தமாக 60 பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் கடமையில் ஈடு படுத்தப்பட்டுள்ளதோடு, அதிகபட்சமாக நாளொன்றுக்கு 20 பேர் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக தெரி விக்கப்படுகிறது. (நி-8)


1 ஆம் ஆண்டு நினைவு



தோற்றம் 1968.14.04

மறைவு 2023.11.25

சித்தியம்புளியடி, தெல்லிப்பழை.

அமரர். முருகேசு விஜயரட்ணம்

பஞ்சாய் பறந்ததுவே ஆண்டு ஒன்று
பரிதவிக்கின்றோம் பாவிகள் நாங்கள் அப்பா
போனது எங்கே என்று பேதலிக்கும் எமக்கு
நானது இங்கே தான் என்று அடிக்கடி
காட்டும் உங்கள் நிழல் படம்
எல்லோர் நெஞ்சமதில் என்றும் நிலைத்து நின்று
எம் கண்முன்னே அடிக்கடி வந்து போகும்
இனிதாய் பெற்றெடுத்த பிள்ளைச் செல்வங்களோடு
பெருவாழ்வு வாழ நினைத்தாய்
கண்ணிமைக்கும் நேரத்தில்
காலனுனைக் கவர்ந்து சென்ற கொடுமையை
ஆண்டொன்று எண்ணிக் கலங்கிட நகர்ந்தது
காத்திருப்போம் உன் சுவாசக் காற்றுடன்.

(625)

என்றும் உங்கள் நினைவுகளுடன்
மனைவி-சசி, பிள்ளைகள்- யதுஷா, தனுஷா, அபிஷா.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவம்பர் மாதத்துக்கான ஐ.சி.சியின் சிறந்த வீரராக பாக்.வீரர் ஹாரிஸ்




அவுஸ்திரேலியாவில் வரலாற்றுச் சிறப்புமிக்க தொடர் வெற்றிக்கு உத்வேகம் அளித்த பாகிஸ்தான் நட்சத்திரம் ஹாரிஸ் ரவூப் 2024 நவம்பர் மாதத்துக்கான ஐ.சி.சியின் சிறந்த வீரர் விருதை வென்றுள்ளார்.

இந்தியாவின் ஜஸ்பிரித் பும்ரா மற்றும் தென்னாபிரிக்காவின் மார்கோ ஜான்சனுடனான பலத்த போட்டிக்கு மத்தியில் அவர் இந்த விருதினை வென்றுள்ளார்.

மூன்று ஒருநாள் போட்டிகளின் போது 10 விக்கெட்டுகளை வீழ்த்தி, 22 ஆண்டுகளின் பின்னர் அவுஸ்திரேலியாவுக்கு எதிராக முதல் ஒருநாள் தொடரை பாகிஸ்தான் வெல்வதற்கு வழி அமைத்தார்.

ரவூஃப் ஒட்டுமொத்தமாக நவம்பர் மாதத்தில் 18 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான இரண்டாவது ஒருநாள் போட்டியில் 31 வயதான இவரின் சிறப்பான ஆட்டம் வெளிப்பட்டது. அடிலெய்டில் நடந்த இந்தப் போட்டியின் போது அவர் 29 ஓட்டங்களுக்கு ஐந்து விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

பாகிஸ்தான் அணிக்காக தனது இரண்டாவது ஐந்து விக்கெட்டுகளை கைப்பற்றிய ரவூப்பின் பந்து வீச்சினால், வெறும் 163 ஓட்டங்களுக்கு அவுஸ்திரேலியா சகல விக்கெட்டுகளையும் இழந்தது. இதனால், அப் போட்டியில் பாகிஸ்தான் ஒன்பது விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. தீர்க்கமான மூன்றாவது ஒருநாள் போட்டியில், வலது கை வேகப்பந்து வீச்சாளர் மேலும் இரு விக்கெட்டுகளை வீழ்த்தினார். இறுதியாக மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை 2-1 என்ற கணக்கில் பாகிஸ்தான் கைப்பற்றியதுடன் ரவூஃப் தொடரின் நாயகனாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இது தவிர அவுஸ்திரேலியாவுக்கு எதிரான மூன்று டி20 போட்டிகளிலும் அவர் மொத்தமாக ஐந்து விக்கெட்டுகளை கைப்பற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (6-8)


## வலிகாமம் வடக்கு பிரதேசசபை காங்கேசன்துறை
## கடைகள் வாடகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல்- 2025

வலிகாமம் வடக்கு பிரதேசசபைக்கு சொந்தமான கீழ் குறிப்பிடப்படும் அட்டவணையில் விபரிக்கப்படும் கடையினை பின்வரும் நிபந்தனைகளுக்கு அமைய மாதாந்த வாடகைக்கு வழங்குவதற்கு கேள்விகள் கோரப்படுகின்றன.

**கேள்விப் பத்திரம் வழங்கப்படும் திகதி :-13.12.2024 தொடக்கம் 26.12.2024 பிற்பகல் 12.30 மணிவரை**

**கேள்விப்பத்திரம் ஏற்கப்படும் இறுதித்திகதி:- 26.12.2024 வியாழக்கிழமை பிற்பகல் 02.00 மணிவரை**

**கேள்விப் பத்திரம் திறந்து பரிசீலிக்கப்படும் திகதி:- 26.12.2024 வியாழக்கிழமை பிற்பகல் 02.30 மணிவரை**

கேள்விகள் இரு பிரதிகளில் தயாரித்து அரக்கு முத்திரையிட்டு மூலப்பிரதியினை செயலாளர், வலிகாமம் வடக்கு பிரதேசசபை, காங்கேசன்துறை எனும் முகவரிக்கு 26.12.2024 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு முன்னதாக கிடைக்க கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும் அல்லது தலைமையலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் இடப்படல் வேண்டும். மறு பிரதியினை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவிஆணையாளர் அலுவலகம் ,யாழ்ப்பாணம்" எனும் முகவரிக்கு குறித்த திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்படல் வேண்டும்.

01. உள்ளூராட்சி மன்றங்களினால் தவறுநராகக் கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப் பத்திரங்கள் வழங்கப்படமாட்டாது. எனினும் தவறுதலாக வழங்கப்பட்டிருப்பின் அது நிராகரிக்கப்படுவதுடன் இது தொடர்பான வைப்புக்கள் ஏதும் மீளளிக்கப்படமாட்டாது.
02. ஆகக் குறைந்த கேள்வித் தொகையிலும் குறைந்த கேள்வி கோருபவர்களின் கேள்வி நிராகரிக்கப்படுவதுடன் கேள்வி வைப்புப் பணம் மீளளிக்கப்படமாட்டாது.
03. கேள்விகள் திறக்கப்படும் சமயத்தில் கேள்விதாரரோ அல்லது அவரது அனுமதியளிக்கப்பட்ட பிரதிநிதியோ சமூகமளிக்க முடியும்.
04. கேள்வி நிபந்தனைகள், அறிவுறுத்தல்களுக்கு அமையாத கேள்விகளை நிராகரிக்கவும் எந்தவொரு கேள்விதாரரை காரணம் காட்டாது ஏற்கவோ/ நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கு அதிகாரம் உண்டு.
05. இவ் வியாபாரநிலையங்களுக்கான மாதாந்த வாடகை விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தால் நிர்ணயிக்கப்படும் தொகைக்கேற்ப சித்திபெறும் கேள்விதாரரிடமிருந்து பிரதேசசபையால் அறவிடப்படும். அத்துடன் காலத்திற்கு காலம் விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தால் நிர்ணயிக்கப்படும் வாடகை செலுத்தப்பட வேண்டும்.
06. கடையை வாடகைக்கு எடுப்பவராலேயே கடை நடாத்தப்படவேண்டும். பிரதிநிதி எவரும் அவர் சார்பில் நடாத்த அனுமதிக்கப்படமாட்டார். எனினும் வாடகைக்கு பெற்றவரின் இயலாமை, இறப்பு போன்ற காரணங்களினால் அவரது வாழ்க்கைதுணை அல்லது அவரது வாரிசு நடாத்த அனுமதிக்கப்படுவர்.
07. கடை கட்டடத்தில் புனரமைப்புவேலைகள், மாற்றங்கள், சேர்ப்புகள் எதுவும் சபையின் அனுமதியின்றி மேற்கொள்ள முடியாது.
08. சித்திபெறாத கேள்விதாரரின் கேள்வி வைப்புப்பணம் ஒப்பந்தம் பூர்த்தியான பின்னர் மீளளிக்கமுடியும்.
09. தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரர் சபையால் வழங்கப்பட்ட கால எல்லைக்குள் முழுத்தொகையையும் முழுமையாகச் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் செய்து கொள்ளவேண்டும். ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு இரு வாரத்திற்குள் பிரதேசசபையிடம் உரிய வியாபாரத்திற்கான வியாபார உரிமத்தினை பெற்று வியாபாரம்/ தொழில் ஆரம்பிக்கப்படல் வேண்டும்.
10. சித்திபெற்ற கேள்விதாரரால் பிரதேசசபைக்கு செலுத்தப்பட்ட ஒருங்கிணைந்த கட்டுப்பணம் எச்சந்தர்ப்பத்திலும் மீளளிப்புச்செய்யப்படமாட்டாது.
11. பெற்றுக்கொள்ளும் கடைகளில் ஏற்படும் பாதிப்புகளுக்கு குத்தகைக்கு எடுத்தவரே பொறுப்புடையவராவார்.
12. சித்தி பெறும் கேள்விதாரர் பிரதேசசபையால் அங்கீகரிக்கப்படாத பொருள்களை விற்பனை செய்வதோ, மதுபானவகைகளோ, போதை வஸ்துக்களோ அல்லது தடைசெய்யப்பட்ட வேறு எந்தபொருள்களையோ விற்பனை செய்வது தடை செய்யப்படுவதுடன் ,கடைக்கட்டடம் வேறு எந்த சட்ட விரோத நடவடிக்கைகளுக்கும் பாவித்தல் கூடாது.
13. வாடகைப்பணம் ஒவ்வொரு மாதமும் 10 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்த வேண்டும். தவறின் தண்டப்பணமும் சேர்த்து அறவிடப்படும் என்பதுடன் வாடகைப்பணம் மூன்று மாதங்கள் தொடர்ந்து செலுத்த தவறின் முன்னறிவித்தலின்றி வாடகை ஒப்பந்தம் தானாகவே இரத்துச் செய்யப்பட்டதாக கருதப்படும்.
14. சித்திபெறும் கேள்விதாரர் 31.12.2024 இற்கு முன் ஒருங்கிணைந்த கட்டுப்பணம் முழுவதனையும் ஒரே தடவையில் செலுத்துதல் வேண்டும்
15. கேள்வி சம்மந்தமாக மேலதிக விபரங்களை/தகவல்களை பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் நேரடியாகவோ அல்லது 021 224 1130 தொலைபேசி இலக்கத்தின் ஊடாகவோ பெற்றுக்கொள்ளலாம்.

| விபரம் | பரப்பளவு (சதுர அடி) | ஆகக் குறைந்த கேள்வித் தொகை (ஒருங் கிணைந்த கட்டுப்பணம்) | மாத வாடகை | கேள்விப் பத்திர கட்டணம் | கேள்வி வைப்பு மீளளிக்கக் கூடியது |
|---|---|---|---|---|---|
| காங்கேசன்துறை பொதுச்சந்தை புதிய கடை | 240 | 720.000.00 | 3.000.00 | 1.500.00 | 72.000.00 |
| மல்லாகம் உப அலுவலகத்துடன் இணைந்த இருபகுதிகள் ஆக்கப்பட்ட கடை | 240 | 1.440.000.00 | 6.000.00 | 1.500.00 | 144.000.00 |
| மல்லாகம் சந்தை கடை தொகுதி இல 2 | 162.5 | 840,000.00 | 3.500.00 | 1.500.00 | 84.000.00 |
| மல்லாகம் சந்தை கடை தொகுதி இல 6 | 162.5 | 840.000.00 | 3.500.00 | 1.500.00 | 84.000.00 |
| மல்லாகம் சந்தை கடை தொகுதி இல 7 | 162.5 | 840,000.00 | 3.500.00 | 1.500.00 | 84.000.00 |

திரு.சு.சுதர்ஜன், உள்ளூர் அதிகார பெறுகைச்சபை
வலிகாமம் வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை. 13.12.2024


## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | சாவகச்சேரி ரூபா | நெல்லியடி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|
| கத்தரிக்காய் | 500 | 300-650 | 450 |
| உருளைக்கிழங்கு | 250 | 220 | 300 |
| பச்சைமிளகாய் | 1000 | 900-1100 | 1000 |
| தக்காளி | 300 | 250-300 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 240 | 100-160 | 200 |
| கோவா | 250 | 250 | 400 |
| கரட் | 250 | 220 | 300 |
| பூசணி | 200 | 120 | 200 |
| புடோல் | 300 | 250 | 400 |
| வாழைக்காய் | 100 | 100-120 | 250 |
| சின்ன வெங்காயம் | 300 | 150-300 | 400 |
| பெரிய வெங்காயம் | 250 | -- | 300 |
| பாகற்காய் | 1000 | 700-300 | 2400 |
| வெண்டக்காய் | 200 | 200 | 400 |
| கருணைக் கிழங்கு | 160 | 130 | 200 |
| பயற்றங்காய் | 500 | 400-550 | 600 |
| லீக்ஸ் | 300 | 300 | 400 |
| பீற்றூட் | 200 | 300 | 400 |
| கறிமிளகாய் | 800 | 600-700 | 800 |
| முருங்கைக்காய் | 1000 | -- | 1200 |
| போஞ்சி | 500 | 550 | 400 |
| கத்தரிதம்புள்ள | 350 | -- | 450 |
| கீரை - 1 பிடி | 150 | 150-200 | 250 |
| தேசிக்காய் | 500 | 450-550 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 150 | 80-140 | 150-200 |
| இராசவள்ளி | 650 | 680 | 1200 |
| வெங்காயப்பூ | 500 | -- | -- |
| முள்ளங்கி | 300 | 100 | 320 |
| பொன்னாங்காணி | 150 | -- | 80 |
| வல்லாரை | 100 | 80 | 100 |
| ஈரப்பலா | 100 | 90 | 200 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்(வ-து)

பதிவு இல - J/1594 பதிவு திகதி -11.03.1972

## பதவி வெற்றிடம்

**1.பதவி - கிராமிய வங்கி எழுதுநர் (01)**
குறியீட்டு இல - 300/12 (02/2022 இன் படி)
சம்பள அளவுத் திட்டம் -18820 -170X10-185X10-22370
பால் -ஆண்/பெண்

**தகைமைகள்:-(01/2021 இன் படி)**

அ.I) கூட்டுறவு ஊழியர் 13 ஆவது சம்பளத்திட்டத்தில் எழுதுநர் பதவியில் 02 வருட அனுபவம் அத்துடன் கணனியை உபயோகித்துப் பணியாற்றும் ஆற்றலை உறுதிப்படுத்தும் அனுபவச் சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்./

கூட்டுறவு ஊழியர் 14 ஆவது சம்பளத்திட்டத்தில் எழுதுநர் பதவியில் 04 வருட அனுபவம் அத்துடன் கணனியை உபயோகித்துப் பணியாற்றும் ஆற்றலை உறுதிப்படுத்தும் அனுபவச் சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

(II) கூட்டுறவு ஊழியர் 13 ஆவது சம்பளத்திட்டத்தில் கணனிப்பக்க உருவாக்குநர் பதவியில் 02 வருட அனுபவம்./

கூட்டுறவு ஊழியர் 14 ஆவது சம்பளத்திட்டத்தில் கணனிப்பக்க உருவாக்குநர் பதவியில் 04 வருட அனுபவம்

அல்லது

ஆ.கூட்டுறவு ஊழியர் உயர்தராதரப்பத்திரப் பரீட்சையில் சித்தி/ க.பொ.த உயர்தரப் பரீட்சையில் கணக்கியல் உட்பட 03 பாட சித்தி அத்துடன் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் 03 மாதங்களிற்கு குறையாத MS Office கற்கை நெறி/ அதனை ஒத்த கணனி கற்கை நெறியினைப் பயின்று சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்..

(அ) பிரிவு அல்லது (ஆ) பிரிவு தகைமைப் பிரிவில் பணிக்கு இணைக்கப்பட்டவர்கள் தமது தகுதிகாண் காலத்தினுள் மாகாண கூட்டுறவு பயிற்சி நிறுவனத்தினால் நடாத்தப்படும் கிராமிய வங்கியியல் கற்கை நெறியொன்றை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்து சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

குறிப்பு :-

01. கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்கு வயதெல்லை விலக்களிக்கப்பட்டுள்ளது.
02. சங்கப் பணியாளர்கள் தங்கள் விண்ணப்பங்களை சங்கங்களின் ஊடாக அனுப்பிவைத்தல் வேண்டும்.
03. கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு சட்டப்பிரமாணங்களிற்கமைவாக கோரப்படும் பிணையினைச் செலுத்துதல் வேண்டும்.
04. முழுமையாகப் பூரணப்படுத்தப்படாததும் தகைமையற்றதும் இணைப்புக் களற்றதும் விண்ணப்ப முடிவுதிகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறுவதுமான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**விண்ணப்ப முடிவு திகதி 31.12.2024**

மேற்படி பதவி வெற்றிடத்திற்கான விண்ணப்பத்தினை சங்கத் தலைமைக் காரியாலயத்தில் பெற்று பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்துடன் கல்விச்சான்றிதழ், வதிவிடச்சான்றிதழ், பிறப்புச் சான்றிதழ், சேவைச் சான்றிதழ் மற்றும் அண்மையில் பெற்ற இரு நற்சான்றிதழ்கள் ஆகியவற்றின் பிரதிகள் இணைக்கப்பட்டு தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் கிராமிய வங்கி முகாமையாளர்(300/12) பதவிக்கான விண்ணப்பம் எனக் குறிப்பிட்டு தலைவர் சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், டச்சு வீதி சாவகச்சேரி எனும் முகவரிக்கு 31.12.2024 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும்.

(சி-1780)

பணிப்பாளர் சபைக் கட்டளைப்படி
கூட்டுறவுச் சேவையிலுள்ள
தலைவர்-திரு.சி.சுதர்சன்

ப.தெ.வ.அபி.கூட்.சங்கம்
டச்சு வீதி, சாவகச்சேரி. 13.12.2024

# மின்மாபியாக்களை கட்டுப்படுத்தாமல் கட்டணங்களை குறைக்க முடியாது

## மின்சார பொதுச்சேவை சங்கம்

(கொழும்பு)

மின்சார சபையை ஆக்கிரமித்துள்ள மாபியாக்களைக் கட்டுப்படுத்தாமல் மின் கட்டணத்தைக் குறைக்க முடியாது. அத்தியாவசிய உணவு பொருட்கள் மற்றும் சேவை கட்டமைப்பில் உள்ள மாபியாக்களை கட்டுப்படுத்தாவிடின் கோட்டாபய ராஜபக்ஷவின் கதியே தற்போதைய ஜனாதிபதிக்கும் ஏற்படும் என இலங்கை மின்சார பொதுசேவை சங்கத்தின் தலைவர் மாலக விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள மின்சார பொதுச் சேவை சங்கத்தின் காரியாலயத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

ஆட்சிமாற்றம் மாத்திரமே ஏற்பட்டுள்ளது. கடந்த அரசாங்கத்தின் செயற்பாடுகளையே தற்போதைய அரசாங்கம் முன்னெடுக்கிறது. அத்தியாவசிய உணவு பொருட்கள் மற்றும் சேவை கட்டமைப்பில் உள்ள மாபியாக்களை கட்டுப்படுத்தாவிடின் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு நேர்ந்த கதியே தற்போதைய ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவுக்கு நேரிடும் என அவர் தெரிவித்தார்.. (நி-8)

# 19 ஆம் ஆண்டு நினைவுச்சங்கமம்



மண்ணுலக வாழ்வில் 08.06.1931
வானுறையும் தெய்வமாய் 14.12.2005

## திரு. செல்லையா தம்பித்துரை

*(ஓய்வுபெற்ற நீதிமன்ற முதலியார், துறைமுக அதிகாரசபை அத்தியட்சகர், மஞ்சவனப்பதி முருகன் ஆலய தர்மகர்த்தா சபை உப தலைவர்)*

திதி:சதுர்த்தசி

நிலையில்லாத வாழ்வில்
நீண்டதூரம் எம்மைப் பேணி
சட்டென்று சொல்லும் அறிவுரைகளால்
வாழ்வின் உன்னதத்தை உணர்த்திடுவீர்!
என்றென்றும் உங்கள் நாமம்
எங்கள் நாவில் கலந்திருக்கும்.

(c-1779)

குடும்பத்தினர்

# இராசிபலன்

13.12. 2024
கார்த்திகை 28, வெள்ளிக்கிழமை
திரயோதசி முன்னிரவு 6.44 மணிவரை
பரணி காலை 6.53 மணிவரை

கார்த்திகை பின்னிரவு 5.34 மணிவரை
சுபநேரம் -6.20-7.50 மணிவரை
இராகுகாலம் 10.50-12.20 மணிவரை
பிரதோச விரதம், திருக்கார்த்திகை விரதம்

குமாராலய தீபம்,
திருவண்ணாமலை தீபம்
சந்திராஷ்டமம் - அத்தம்

**வளவன்**


**மேஷம்**
வழிபாட்டால் ஆர்வம் கூடும், காலைப் பொழுதே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ள அழைப்புகள் வந்து சேரலாம்.


**ரிஷபம்**
ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், போசன சுகமுண்டு, புதிய முயற்சிகளில் ஆர்வம் கூடும்.


**மிதுனம்**
தொழில் ரீதியான பயணங்கள் இடம் பெறலாம், வழிபாட்டால் முன்னேற்றம் காணவேண்டிய நாள், உடல் நலனில் கவனம் தேவை, சுப விரயங்கள் மேலோங்கும் நாள்.


**கடகம்**
வீட்டுத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், மற்றவர்கள் கடுமையாக நினைக்கும் வேலையொன்றை நீங்கள் எளிதில் செய்து முடிப்பீர்கள், பணப் புழக்கம் அதிகரிக்கும் நாள்.


**சிம்மம்**
வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், செயற்பாடுகளில் உற்சாகம் காட்டுவீர்கள், தொலைபேசி வழியில் சுபசெய்திகள் வந்து சேரலாம்.


**கன்னி**
மறைமுக எதிர்ப்புகள் மாறும், அதிகம் செலவாகுமென நினைத்த காரியம் நல்லவிதமாக அமையலாம், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள்.


**துலாம்**
சில பிரச்சினைகளை கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம், விரயங்கள் மேலோங்கும் நாள், திருடர் பயமுண்டு.


**விருச்சிகம்**
திடீர் பயணங்கள் சிந்திக்க வைக்கும், வருங்கால நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், விரதம், வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.


**தனுசு**
கடன்சுமை குறைய வழிவகை செய்வீர்கள், புகழ் மிக்கவர்களின் சந்திப்புகள் இடம்பெறலாம், செய்தொழில் மேன்மையுண்டு, காரிய அனுகூலமுண்டு.


**மகரம்**
ஏட்டிக்குப் போட்டியாக செயற்பட்டவர்கள் மனம் மாறுவர், பிள்ளைகளின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், சுப செய்திகள் வந்து சேரலாம்.


**கும்பம்**
வளர்ச்சிப் பாதைக்கு நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், இல்லம் தேடி இனிய செய்திகள் வந்து சேரலாம், உறவினர்களின் வழியில் ஒத்துழைப்பு கிடைக்கும்.


**மீனம்**
பெரிய மனிதர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், முத்தான வாய்ப்புக்கள் இல்லம் வந்து சேரலாம், பகை விலகி பாசம் கூடும், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள்.

பொய்யன் உண்மை சொல்லும் போது கூட யாராலும் நம்பப்படுவதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திறமைக்கு தடைகள் இல்லை வவு. விழிப்புணர்வு ஊர்வலம்



(வவுனியா)

இயலாமையுடன் கூடிய நபர்களுக்கான சர்வதேச தினமான நேற்று மாற்றுத்திறனாளிகளால் வவுனியாவில் விழிப்புணர்வு ஊர்வலம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

அந்தவகையில் உள்வாங்கல் மற்றும் நிலையான எதிர்காலத்திற்காக இயலாமையுடையவர்களின் தலைமைத்துவத்தை விரிவுபடுத்தல் எனும் தொனிப்பொருளில் வவுனியா புதியபேருந்து நிலையத்திற்கு முன்பாக ஆரம்பமான ஊர்வலம் வைத்தியசாலைச் சுற்றுவட்டத்தை அடைந்து அங்கிருந்து வவுனியா நகரசபை கலாசாரமண்டபம் வரை சென்று நிறைவுக்கு வந்தது. அதன் பின்னர் ஏனைய நிகழ்வுகள் குறித்த மண்டபத்தில் இடம் பெற்றது.

ஊர்வலத்தில் ஈடுபட்டவர்கள் நம்பிக்கை மனதில் உண்டு நம்பிக்கை கொடுங்கள், தொழில் உரிமை அனைவருக்கும் உண்டு. திறமைக்கு இயலாமை தடைகள் அல்ல.

போன்ற வாசகங்கள் தாங்கிய பதாகைகளை ஏந்தியிருந்தனர்.

குறித்த நிகழ்வை வவுனியா மாவட்ட செயலகம் மற்றும் ஒஹான் நிறுவனம் ஆகியவை இணைந்து நடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (6-8)

# முற்றவெளியில் உணவுத் திருவிழா

(யாழ்ப்பாணம்)

வட மாகாண சுற்றுலாப் பணியகத்தினால் நடத்தப்படும் பாரம்பரிய உணவுத்திருவிழா நிகழ்வானது நாளை சனிக்கிழமை யாழ். முற்றவெளிப் பகுதியில் ஆரம்பமாகவுள்ளது.

குறித்த விழா 15,16 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

சுற்றுலாப் பயணிகள் பயன் பெறக்கூடிய வகையில் பல நிகழ்வுகள் இவ் உணவுத் திருவிழாவில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

குறித்த நாட்களில் பி.ப 3 மணி தொடக்கம் இரவு 9 மணி வரை இடம்பெறும் உணவுத் திருவிழா நிகழ்வில் பாரம்பரிய உணவுகள், கலை நிகழ்வுகள் என்பன இடம்பெறும். அதே வேளை நாளை முறுதினம் ஞாயிற்றுக்கிழமை பழைய வாகனங்களின் பவனியும் இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6-8)

# பால்நிலை சமத்துவ 2ஆவது மாநாடு யாழ். பல்கலையில்



(யாழ்ப்பாணம்)


"பால்நிலையை முதன்மைப்படுத்துவதற்கான பல்துறை சார்ந்த மற்றும் ஒன்றிணைந்த முன்னோக்குகள்" எனும் தொனிப்பொருளில் "வியோபம்" சர்வதேச 2ஆவது ஆண்டு மாநாடு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நேற்று முன்தினம் இடம் பெற்றது.

யாழ். பல்கலைக்கழக பால் நிலை ஒப்புரவு மற்றும் சமத்துவத்துக்கான நிலையத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இம் மாநாடு குறித்த நிலையப் பணிப்பாளரும் சந்தைப்படுத்தல் துறைத்தலைவருமான பேராசிரியர் எஸ். சிவாணி தலைமையில் நடைபெற்றது.

ஆய்வு மாநாட்டுத் திறவுரைகளைத் தொடர்ந்து ஆய்வுக் கட்டுரைகள், அனுபவப் பகிர்வுகள் மற்றும் செய்தி மடல் என்பன வெளியீடு இடம் பெற்றதுடன், வடக்கு மாகாணத்தில் பால் நிலை சமத்துவத்தை முதன்மைப்படுத்துவதற்காகத் தம்மை அர்ப்பணித்துச் சேவையாற்றியவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வும் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் ஐ.நா வதிவிடப்பிரதிநிதிகள் வடக்கு மாகாணத்தின் பல்வேறு மாவட்டங்களிலும், பால் நிலை மேம்பாட்டுப் பணிகளில் ஈடுபடும் சமூக மட்டப் பிரதிநிதிகள், பல்கலைக் கழகத்தின் பீடாதிபதிகள், அரசாங்க அலுவலர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (6-8-33)

# கேரளக் கஞ்சாவுடன் கசூரினாவில் இருவர் கைது



(யாழ்ப்பாணம்)

யாழில்218.899 கிலோ கிராமுடைய கேரளக்கஞ்சாவுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

காரைநகர் கசூரினா கடற்கரைக்கு அண்மித்த பகுதியில் நேற்றுக் காலை எரிபொருள் முடிவடைந்த நிலையில் படகொன்று கரையொதுங்கியுள்ளது.

படகு சந்தேகத்திற்கு இடமான முறையில் காணப்பட்டமையால் அதனைப் புலனாய்வாளர்கள் சோதனையிட்ட போது 92 பொதிகளில் 213.899 கிலோகிராம் கேரளக் கஞ்சா படகினுள் காணப்பட்டுள்ளது.

அதனையடுத்து படகில் வந்த இருவரையும் கைது செய்து படகில் மீட்கப்பட்ட கஞ்சா பொதிகளையும் மேலதிக சட்ட நடவடிக்கைக்காக ஊர்காவற்றுறை பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். (6-8-33)

# பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

(யாழ்ப்பாணம்)

யாழ். சௌக்கிய சேவை கூட்டுறவுச் சிக்கன சேமிப்புக் கடன் நிவர்த்திச்சங்கத்தின் 63 ஆவது வருடாந்த பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். போதனா தாதியர் பயிற்சிக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

எனவே சகல அங்கத்தவர்களையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பட்டாளர்கள் அறிவித்துள்ளார்கள். (6-8)

# முல்லையில் இடம்பெற்ற பண்பாட்டுப் பெருவிழா



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட செயலகம், துணுக்காய் பிரதேச செயலகம், வட மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம், மாவட்ட பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம் மற்றும் மாவட்ட உள்ளூராட்சி சபைகள் இணைந்து நடத்திய முல்லைத்தீவு மாவட்ட பண்பாட்டுப் பெருவிழா நேற்று முன்தினம் துணுக்காய் பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் அ.உமா மகேஸ்வரன் தலைமையில் நடைப்பெற்ற குறித்த நிகழ்வில் பிரதம அதிதியாக வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலாளர் சி.திருவாகரன் மற்றும் சிறப்பு விருந்தினர்கள் பாரம்பாரிய கலைகளுடனும், மக்களின் வாழ்வியல் மாதிரி ஊர்திப் பவனிகளுடனும் விழா மண்டபத்திற்கு அழைத்து வரப்பட்டனர்.

இதன் போது "முல்லைச் சாரல்" கலாசார நூல் வெளியீடும் மூத்த கலைஞர்களுக்கு "முல்லை கலைக்கோ" விருதும் இளங் கலைஞர்களுக்கு "முல்லை இளஞ் சுடர்" விருதும் வழங்கி கௌரவிக்கப்பட்டது. (6-8)

# கையூட்டுப் பெற்ற பெண்ணொருவர் கைது

(கொழும்பு)

கண்டி - தலாத்து ஓயா பிரதேசத்தில் மூன்றரை இலட்சம் ரூபாவைக் கையூட்டலாக பெற்றதாகக் கூறப்படும் பெண் ஒருவரை கையூட்டலுக்கு எதிரான விசாரணை ஆணைக் குழு கைது செய்துள்ளது.

கடவத்தை - கோனஹேன பகுதியைச் சேர்ந்த ஒருவர் செய்த முறைப்பாட்டின் பிரகாரம் கண்டி போகம்பர விளையாட்டரங்கிற்கு முன்பாக உள்ள வாகனத் தரிப்பிடத்தில் வைத்து குறித்த பெண் கைது செய்யப்பட்டுள்ளார்.

விவசாய நடவடிக்கைகளுக்கான காணிகளை மறுசீரமைப்பு ஆணைக்குழு ஊடாகப் பெற்றுக் கொடுப்பதற்குத் தேவையான ஏற்பாடுகளைச் செய்து தருவாதாகக் கூறி குறித்த பெண் இடைத்தரகராகச் செயற்பட்டு கையூட்டலாக பணத்தைப் பெற்றுள்ளாரென தெரிவிக்கப்படுகின்றது. (6-8)

# கொக்குத்தொடுவாய் வழக்கு பெப்ரவரி 27ஆம் திகதி தவணை

(நெளுக்குளும்)

கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி தொடர்பான வழக்கு எதிர்வரும் 2025ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 27ஆம் திகதிக்கு தவணையிடப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றத்தில் கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி தொடர்பான வழக்கு விசாரணைக்காக நேற்று எடுத்துக்கொள்ளப்பட்டது. கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி தொடர்பான AR 804/23 வழக்கானது நேற்று முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றத்தில் விசாரணைகளுக்காக அழைக்கப்பட்ட போது சட்ட வைத்திய அதிகாரி சார்பாக அறிக்கை சமர்ப்பிப்பதற்குப் போதுமான கால அவகாசம் இல்லை என்றும் இன்னும் இரண்டு மாத கால அவகாசம் வேண்டும் என்ற அடிப்படையில் மன்றில் திகதியினை கோரியிருந்தனர்.

அதன் அடிப்படையில் மன்றானது சட்ட அதிகாரியின் விண்ணப்பத்தினை ஏற்று குறித்த வழக்கானது மீண்டும் எதிர்வரும் 2025 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 27 ஆம் திகதிக்குத் தவணையிடப்பட்டுள்ளது. (6-8-293)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுக்குடியிருப்பு பிரதேசசபை பொது அறிவித்தல்-2025

**1. படவரைஞராக பதிவு செய்தல்.**

1.1. 2025 ஆம் ஆண்டு படவரைஞராக பதிவு செய்வதற்கு விரும்புவோரும் ஏற்கனவே எமது சபையில் பதிவு செய்துள்ளவர்களும் 2024 ஆம் ஆண்டு டிசெம்பர் 24 ஆம் திகதிக்கு முன்னர் தமது பதிவுகளைச் செய்து கொள்வதற்கும் புதுப்பித்து கொள்வதற்கும் எமது தலைமை அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**2. வியாபார உரிம அனுமதிப்பத்திரம் - 2025**

2.1. 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 149.150.151 ஆம் உப பிரிவுக்கு அமைவாக இப் பிரதேச எல்லைக்குள் வியாபாரம் செய்வோர். பொருட்களை விநியோகிப்போர் 2025ஆம் ஆண்டிற்கான அனுமதிப்பத்திரத்தைப் பெறுவதற்கான விண்ணப்பப் பத்திரத்தைத் தமது பிரிவுக்குட்பட்ட உப அலுவலகங்களில் பெற்று அதனைப் பூரணப்படுத்தி புதுக்குடியிருப்பு. ஒட்டுசுட்டான். ஒலுமடு. உடையார்கட்டு. திருமுறிகண்டி உப அலுவலகங்களில் சமர்ப்பிக்குமாறும் உரியகட்டணங்களை 2025.03.31 ஆம் திகதிக்குள் செலுத்தி உரிமத்தைப் பெற்றுக்கொள்ளுமாறும் கேட்டுகொள்கின்றேன்.

2.2. தற்காலிக வியாபாரம்

வீதிக்கு ஒதுக்கப்பட்ட நிலத்தில் தற்காலிக வியாபாரம் செய்வதாயின் அந்நிலத்திற்கு சொந்தமான திணைக்களத்திடம் அனுமதி பெற்றிருத்தல் வேண்டும் தவறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்

**3. வீடமைப்பு நகரசீர்திருத்தம் கட்டளைச்சட்டம் பிரிவு 268 இன் பிரகாரமான அறிவித்தல்**

3.1. புதுக்குடியிருப்பு பிரதேசபையின் அனுமதியின்றி சபை எல்லைக்குள் அரச. தனியார். அரச சார்பு கட்டடங்கள். மதில். மலசலகூடங்கள். கிணறுகள். குழாய்க்கிணறுகள். பாலம் என்பவற்றை அமைத்தல். புதுப்பித்தல் வேலைகளை அனுமதி இன்றி செய்தல் போன்றன சட்டத்தின்படி தண்டனைக்குரிய குற்றமென்பதை அறியத்தருகின்றேன்.

3.2. ஏற்கனவே அனுமதி பெற்றவர்கள் கட்டடம் கட்டிமுடிக்கப்படாத பட்சத்தில் புதுப்பித்தல் வேண்டும்.

3.3. சபையின் அனுமதிபெற்றுக் கட்டடம் கட்டி முடித்தவர்கள் கட்டி முடிக்கப்பட்டமை தொடர்பாக அலுவலகத்திற்கு அறியத்தந்து உரிய அமைவுச்சான்றிதழைப் (COC) பெற்றுக் கொள்ள வேண்டும்.

3.4. அனுமதியின்றி கட்டடம் கட்டுவோர் மீது. பிரதேச சபைச்சட்டம் மற்றும் புதுக்குடியிருப்பு பிரதேசசபையின் 2025ஆம் ஆண்டு வர்த்தமானி பிரசுரத்திற்கமைவாக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

**4. சூழல் பாதுகாப்பு உரிமம் ( EPL) - 2025**

4.1. மத்திய சுற்றாடல் அதிகாரசபைத் தலைவர் 1980 ஆம் ஆண்டின் 47ஆம் இலக்க தேசிய சுற்றாடல் பாதுகாப்புச்சட்டத்தின் 26 ஆம் பிரிவின் கீழ் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு. எமக்கு வழங்கப்பட்ட குறிக்கப்பட்ட அதிகாரங்களின் கீழ் புதுக்குடியிருப்பு பிரதேசசபையின் நிர்வாகப் பாதுகாப்பு பிரதேசத்தில் 1533/16 ஆம் இலக்க. 2008.01.25 ஆம் திகதிய மற்றும் 1534/18 இலக்க 2008.02.01 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகைகளில் விதந்துரைக்கபட்ட தொழில் நடவடிக்கைகளுக்கு அமைவாக மேற்குறிப்பிட்ட அறிவித்தலுக்கு இணங்க வியாபாரத்தை. தொழிலை நடத்துகின்ற உரிமையாளர்களுக்கு சூழல் பாதுகாப்பு உரிமம் வழங்க வேண்டிய பொறுப்பு எமக்கு வழங்கப்பட்டுள்ளது. ஆகவே சம்பந்தப்பட்டவர்கள் உரிமம் முடிவடைய ஒரு வாரத்திற்கு முன்னர் புதுக்குடியிருப்பு பிரதேசசபையின் தலைமைப் பணிமனையுடன் தொடர்பு கொண்டு சூழல் பாதுகாப்பு உரிமத்தைப் பெற உரிய நடவடிக்கை எடுக்கவும். இவ்வாறு உரிமம் பெறாத எவரும் 2025 ஆம் ஆண்டு மேற்குறிப்பிட்ட தொழில்களை நடாத்த அனுமதிக்கப்படமாட்டார்கள் என்பதனையும் இத்தால் அறியத் தருகின்றேன்.

**5. விளம்பரங்களை அமைத்தல் / காட்சிப்படுத்தல்**

5.1. 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122(1) பிரிவிற்கு அமைவான துணைவிதியின் பிரகாரம் இப் பிரதேசசபையின் நிர்வாகப் பிரிவிலுள்ள பொது வீதிகளின் இருமருங்கிலும் அத்துடன் வர்த்தக நிலையங்களின் முகப்புக்களிலும் பொருத்தப்பட்டு காட்சிப்படுத்தப்படும் விளம்பரங்களுக்கு 31.03.2025 ஆம் திகதிக்கு முன் உரிய கட்டணத்தைச் செலுத்தி சபையின் அனுமதியைப் பெற்றுகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள வர்த்தகர்கள் தமது வர்த்தக நிலையங்களில் விளம்பரங்கள் இல்லாத பெயர்ப்பலகை ஒன்று மட்டும் காட்சிப்படுத்த முடியும். விளம்பரங்களுடானான பெயர்ப்பலகை மற்றும் மேலதிகமாக உள்ள விளம்பரங்களுக்குப் பிரதேசசபையின் முன் அனுமதி பெறப்படல் வேண்டும். அவ்வாறு அனுமதி பெறப்படாத விளம்பரப்பலகைகள் பிரதேசசபையால் முன்னறிவித்தலின்றி அகற்றப்படும்.

**6. பொதுச்சந்தைகள், இறைச்சிக்கடைகள் அண்மித்த பகுதியில் கடலுணவுகள், மரக்கறிகள், இறைச்சி வகைகள் விற்பனையைத் தடைசெய்தல்.**

6.1. புதுக்குடியிருப்பு பிரதேசசபையின் பொதுச்சந்தைகள். இறைச்சிகடைகள் அமைந்துள்ள பகுதிகளில் 1கி.மீ வரையான சுற்றாடலில் மரக்கறிகள். கடலுணவுகள். இறைச்சி வகைகள். என்பன வர்த்தக நிலையங்களிலோ. வீதியோரங்களிலோ விற்பனை செய்தல் முற்றாகத் தடைசெய்யபட்டுள்ளது. இதனை மீறுபவர்கள் மீது சபையால் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை அறியத்தருகின்றேன்.

**7. பொது இடங்களில் கழிவுகள் போடுதல் தொடர்பான அறிவித்தல்**

7.1. 1987 ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 153 ஆம் பிரிவிற்கு அமைவாக புதுக்குடியிருப்பு பிரதேசசபை எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் கழிவுப் பொருட்களை அனுமதியின்றிக் கொண்டு செல்லல். கொட்டுதல் ஆகியன பொது சுகாதாரத்தைக் கருத்திற் கொண்டு தடை செய்யப்பட்டுள்ளது. தவறின் பிரதேசசபை சட்டம் மற்றும் சுற்றாடல் பாதுகாப்புச் சட்டம் போன்றவற்றின் பிரகாரம் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

7.2. சபையின் எல்லைக்குட்பட்ட பொது இடங்களிலும். வர்த்தக நிலையங்கள் முன்பாகவும். வாய்க்கால்களிலும். வீதியோரங்களிலும் கழிவுப்பொருட்களைப் போடுதல் தடைசெய்யப்பட்டுள்ளது. பொதுமக்கள். வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்கள் தங்களிடம் சேரும் கழிவுப்பொருட்களைக் கொள்கலனில் சேகரித்து அதனை அகற்றுவதற்கு எமது சபையின் உப அலுவலகங்களில் உரியகட்டணத்தைச் செலுத்தி சுற்றாடல் பாதுகாப்பிற்கு ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக்கொள்கின்றோம். தனிநபர் அல்லது தனியார் கழிவகற்றல் செயற்பாட்டில் ஈடுபடுவதாயின் பிரதேசசபைக்கு உரிய கட்டணத்தினை செலுத்தி அனுமதியினைப் பெற்றுக்கொள்ளலாம்.

**8. பொதுசுகாதாரம் பேணுதல்.**

8.1. 1987 ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 153 ஆம் பிரிவிற்கு அமைவாக சபை எல்லைக்குள் அபிவிருத்தி செய்யப்படாமலும். பற்றைகள் வளர்ந்தும் பொது சுகாதாதாரத்திற்கு இடையூறாக உள்ள காணி உரிமையாளர்கள் பற்றைகளைத் துப்பரவு செய்து சுகாதாரத்தினைப் பேணுவதற்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டும். தவறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

**9. கட்டாக்காலி கால்நடைகளைக் கட்டுப்படுத்தல்**

9.1. 1987ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேசசபைகள் சட்டத்தின் 66(1) ஆம் பிரிவுக்கு அமைவாக சபை எல்லைக்குள் பொதுப்போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படும் வகையில் வீதிகளில் அலைந்து திரியும் கட்டாக்காலிக் கால்நடைகளை கட்டுப்படுத்தி உரிமையாளர்கள் சரியான முறையில் பராமரித்தல் வேண்டும். தவறும் பட்சத்தில் பிரதான வீதியை உள்ளடக்கிய நகர்ப்பகுதிகளில் பகல்.இரவு நேரங்களிலும் ஏனைய வீதிகளில் இரவு நேரத்திலும் நடமாடும் கட்டாக்காலி கால்நடைகள் பிரதேச சபையால் பிடிக்கப்பட்டு பிடிகூலி. தண்டப்பணம் அறவிடப்படும் என்பதுடன் செலுத்தத் தவறும் பட்சத்தில் பகிரங்க ஏலத்தில் விடப்படுவதுடன் உரிமையாளருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கையும் எடுக்கப்படும்.

**10. சபை எல்லைக்குள் வழியுரிமம், தரிப்பிட கட்டணம்**

10.1. 1987ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 68ஆம் பிரிவுக்கு அமைவாக சபை எல்லைக்குள் கல். ஆற்றுமணல்.கிரவல் என்பவற்றுக்கான வழி அனுமதி குறித்த உப அலுவலங்களில் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

10.2. சபை எல்லைக்குள் வாகனங்கள் நிறுத்தப்படுவதற்கான தரிப்பிட அனுமதி குறித்த உப அலுவலகங்களில் பெற்றுக்கொள்ளப்படவேண்டும்.

**11. இறந்தவர்களின் உடல்களை தகனம், நல்லடக்கம் செய்தல்.**

சுடுகாடுகள். இடுகாடுகள் சட்டத்திற்கமைய புதுக்குடியிருப்பு சபை எல்லைக்குள் உள்ள சுடுகாடுகள். இடுகாடுகளில் இறந்தவர்களின் உடல்களை தகனம் செய்வதற்கு அல்லது புதைப்பதற்கு பிரதேசசபையின் 2025 ஆம் ஆண்டு வர்த்தமானி அறிவித்தலுக்கமைய பிரதேசசபையின் அனுமதி பெற்று மயானக் கட்டணம் செலுத்தியே தகனம் செய்தல் வேண்டும்.

**12. காணிகளை பராமரித்தல்.**

சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் குடியிருப்புக்களுக்கு அண்டிய காணிகள் துப்பரவு செய்யாது பராமரிப்பற்று பற்றைக்காடுகளாக காணப்படின் அவற்றினை உரியவர்கள் துப்பரவு செய்தல் வேண்டும். மீறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

**13. ஆதனவரி விதித்து அறவிடல்**

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 134 (1).(2).(3) பிரிவின் கீழ் புதுக்குடியிருப்பு பிரதேசசபை எல்லைக்குள் அமைந்துள்ள கட்டமைந்த பிரதேசமாக பிரகடனப் படுத்தப்பட்ட பிரதேசங்கள் இவ் ஆண்டில் அடைந்துள்ள அபிவிருத்திக்கு ஏற்ப இனங்காணப்பட்டு எதிர்வரும் ஆண்டிலிருந்து (2025) மதிப்பிடப்பட்ட ஆதனங்களுக்குரிய பெறுமதிக்கு ஏற்ப ஆதனவரியினை 4% ஆக அறவிடுவதற்காக 2022 ஆம் ஆண்டு சித்திரை மாதம் 18 ஆம் திகதி நடைபெற்ற புதுக்குடியிருப்பு பிரதேச சபை சபை அமர்வின் தீர்மான இலக்கம் PTKPS/2022/58 இன் கீழ் பின்வரும் முன்மொழிவு நிறைவேற்றப்பட்டு. வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் அவர்களின் G/NPC/A4/LG/Approval/74/2022 ஆம் இலக்க 27.09.2022 ஆம் திகதிய கடிதம் மூலம் அனுமதி வழங்கப்பட்டதற்கமைவாக ஆதனவரியினை அறவீடு செய்தல்.

(சி-1782)

**ச.கிருசாந்தன்**
**செயலாளர்,புதுக்குடியிருப்பு பிரதேசசபை,**
**புதுக்குடியிருப்பு.**

**2024.12.13**

## இலங்கையை கட்டியெழுப்ப நாமும் ஒத்துழைப்போம்

### ஐக்கிய அரபு அமீரகம் தெரிவிப்பு



(கொழும்பு)

அபிவிருத்தி அடைந்த இலங்கையை கட்டியெழுப்ப தற்போதைய அரசாங்கம் முன்னெடுக்கும் வேலைத்திட்டத்திற்கு ஒத்துழைப்பு வழங்க ஐக்கிய அரபு அமீரகம் இணக்கம் தெரிவித்துள்ளது.

இலங்கைக்குள் மேற்கொள்ளப்படும் முதலீடுகளை அதிகரிப்பதுடன் டிஜிட்டல் மயமாக்கல் மற்றும் புதிய தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்துவதற் கான தொழில்நுட்ப அறிவை பெற்றுத் தருவதாகவும் இலங்கைக்கான ஐக்கிய அரபு அமீரகத்தின் தூதுவர் காலித் நசர் அல் அமேரி தெரிவித்தார்.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க மற்றும் ஐக்கிய அரபு அமீரகத்தின் தூதுவர் காலித் நசர் அல் அமேரி ஆகியோருக்கு இடையிலான சந்திப்பு நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

ஐக்கிய அரபு அமீரகத்தில் தற்போது 150,000 இலங் கையர்கள் தொழில் செய்து வருவதாகவும் அந்த தொகையை மேலும் அதிகரிப்பது குறித்தும் இதன் போது கவனம் செலுத்தப்பட்டது.

இலங்கையின் ஆறாவது மிகப்பெரிய ஏற்றுமதி சந்தையாக ஐக்கிய அரபு அமீரகமே காணப்படும் நிலையில், அந்த சந்தை வாய்ப்புகளை மேலும் விரிவுபடுத்திக்கொள்வது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

அதேபோல் இரு நாடுகளுக்கும் இடையில் காணப்படும் நீண்டகால நட்புறவை மேலும் பலப்படுத்திக்கொள்வதோடு இலங்கைக்கு எந்தவொரு சந்தர்ப்பத்திலும் எந்தவொரு உதவியையும் செய்யத் தயாராக இருப்பதாகவும் தூதுவர் இதன் போது ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவிடம் உறுதியளித்தார்.

எதிர்வரும் காலங்களில் ஐக்கிய அரபு அமீரகத்துக்கு விஜயமொன்றை மேற்கொள்ளுமாறும் ஐக்கிய அரபு அமீரகத்தின் தூதுவர் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்கு அழைப்பு விடுத்தார். (நி-8)


**வாடகைக்கு**

A9 கரடிப்போக்கு கிளிநொச்சியில் கட்டடத் தொகுதி வாடகைக்கு விடப்படும்.

(2747)

தொடர்பு
**077 448 1433**
**077 664 5978**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# ஆழ்துளைக் கிணற்றில் வீழ்ந்த சிறு

# வீணானது 56 மணிநேர போரா

## சோகமயமானது ராஜஸ்தானின் தௌசா கிர

(டில்லி)

**ராஜஸ்தான் மாநிலம் தௌசாவில் 150 அடி ஆழ்துளை கிணற்றில் சிக்கி 5 வயது சிறுவன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.**





56 மணிநேரம் அல்லது இரண்டு நாட்களுக்கும் மேலான அதிகாரிகளின் தொடர்ச்சியான மீட்பு பணிகளின் பின்னர், கிணற்றிலிருந்து வெளியே எடுக்கப்பட்ட ஆர்யன் என்ற சிறுவன் மயங்கிய நிலையில் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

எனினும் அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டதாக வைத்தியர்கள் அறிவித்துள்ளனர்.

கடந்த திங்கட்கிழமை பிற்பகல் 3 மணியளவில் கலிகாட் கிராமத்தில் வயலில் விளையாடிக் கொண்டிருந்த ஆர்யன் 150 அடி ஆழமுள்ள ஆழ்துளைக் கிணற்றில் தவறி விழுந்துள்ளார்.

மீட்புப் பணி ஒரு மணி நேரம் கழித்து தொடங்கியது.

ஜேசிபி வாகனங்கள், துளையிடும் இயந்திரங்கள் மற்றும் ஒரு பைலிங் ரிக் ஆகியவை மூலம் சிறுவனை மீட்பதற்காக இணையான சுரங்கப் பாதை தோண்டப்பட்டது.

அதேநேரத்தில் குழாய் மூலம் ஆக்ஸிஜன் வழங்கப்பட்டது மற்றும் சிசிடிவி கமராக்கள் மூலம் ஆர்யனின் நிலை கண்காணிக்கப்பட்டது.

துளையிடும் இயந்திரத்தில் ஏற்பட்ட தொழில் நுட்பக் கோளாறு மற்றும் சுமார் 160 அடியாக மதிப்பிடப்பட்ட நீர்மட்டம் உள்ளிட்டவை மீட்பு பணிகளில் பல சவால்களை ஏற்படுத்தியிருந்தன.

எனினும், நீண்ட நேர போராட்டத்தின் பின்னர் மீட்புப் பணியாளர்கள் சிறுவனைச் சுற்றி கயிறு கட்டி மயக்கமடைந்த நிலையில் ஆழ்துளை கிணற்றிலிருந்து வெளியே எடுத்தனர்.

பின்னர் மேம்பட்ட உயிர் பாதுகாப்பு அமைப்பு பொருத்தப்பட்ட அம்புலன்ஸ் மூலம்

# இஸ்ரேலின் கொடூர தாக்குதலில் குழந்தைகள் உட்பட 33 பேர் பலி



(ஜெருசலேம்)


காசா முனையில் இஸ்ரேல் தொடர் தாக்குதல் நடத்தி வருகிறது. அந்த வகையில் இடம்பெயர்ந்தவர்கள் தங்கியிருந்த வீட்டில் நேற்று முன்தினம் இரவு இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் 33 பேர் உயிரிழந்ததாக பாலஸ்தீன சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இதில் பெரும்பாலானோர் குழந்தைகள்.

இஸ்ரேல் மற்றும் லெபனான் ஹிஸ்புல்லா இடையே போர் நிறுத்த ஒப்பந்தம் எட்டிய நிலையிலும் இஸ்ரேல், ஹமாஸ் இடையிலான போர் முடிவுக்கு வரவில்லை. தற்போதைய அமெரிக்க அரசு மற்றும் புதிதாக ஆட்சி அமைக்க இருக்கும் அமெரிக்க நிர்வாகங்கள் அடுத்த ஆண்டு ஜனவரியில் புதிய அமெரிக்க ஜனாதிபதி பதவியேற்கும் முன் போரை முடிவுக்கு கொண்டுவர நம்பிக்கை தெரிவித்துள்ளன.

எனினும் இது தொடர்பான போர் நிறுத்த பேச்சுவார்த்தைகள் தொடர்ந்து முடங்கி வருகின்றன. சமீபத்திய தாக்குதலை மருத்துவமனையின் அருகாமையில் இருந்த ஹமாஸ் அமைப்பினரை குறிவைத்து நடத்தியதாக இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது. (இ-8)

# உறுதி செய்யப்

## உலகக் கிண்ணங்களுக்க



ஸ்பெயின், போர்த்துக்கல் மற்றும் மொரோக்கோ ஆகியவை 2030 ஆம் ஆண்டில் போட்டிகளை கூட்டாக நடத்தவுள்ளன என்பதை உலக கால்பந்து குழுவான ஃபிஃபா உறுதிப்படுத்தியுள்ளது.

போட்டிகளின் 100 ஆண்டுகளைக் குறிக்கும் வகையில் 2030 ஆம் ஆண்டு நடைபெற இருக்கும் போட்டிகளில் மூன்று போட்டிகள் ஆர்ஜென்டினா, பராகுவே மற்றும் உருகுவே ஆகிய நாடுகளிலும் நடைபெறும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வாக்கெடுப்புக்குப் பின்னர் நேற்று முன்தினம் புதன்கிழமை நடந்த, விசேட ஃபிஃபா காங்கிரஸ் கூட்டத்தில், குறித்த ணங்களுக்கான நாடுகள் உறுதி செய்யப்பட்டன.

2034 ஆம் ஆண்டிற்கான கால்பந்து உலகக் கி அரேபியாவில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

றுவன் !

ாட்டம்!


கிராமம்



ள ... ஆர்யன் வைத்தியசாலைக்கு
யே கொண்டு செல்லப்பட்டார்.
எனினும் அங்கு அவர்
பிர் துரதிர்ஷ்டவசமாக உயிரிழந்து
நத் விட்டதாக அறிவிக்கப்பட்
ம் டது. (நி-8)

ப்பட்டது

க்கான நாடுகள்



றித்த இரண்டு உலகக் கிண்
ர்.
கக் கிண்ணப் போட்டிகள் சவுதி
க்கது. (நி-8)

## சிரிய ஆட்சிக் கவிழ்ப்பு அமெரிக்கா, இஸ்ரேல் கூட்டுச்சதி

### ஈரான் உச்ச தலைவர் குற்றச்சாட்டு



(டெஹ்ரான்)

சிரியாவில் பசார் அல் ஆசாத்தின் ஆட்சியைக் கிளர்ச்சியாளர்கள் கவிழ்த்தது அமெரிக்காவும் இஸ்ரேலும் கூட்டாக நடத்திய சதிச் செயல் என்று ஈரானின் உச்ச தலைவர் அயதுல்லா அலிகமேனி குற்றஞ் சாட்டியுள்ளர்.

இது குறித்து தலைநகர் டெஹ்ரானில் நேற்று முன் தினம் புதன்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில் அவர் தெரிவித்ததாவது.

சிரியாவில் பஷார் அல்-ஆசாத் தலைமையிலான அரசு அகற்றப்பட்டது. அமெரிக்கா மற்றும் யூத ஆக்கிரமிப்புவாதிகளின் கூட்டுச் சதி என்பது சந்தேகத்துக்கு இடமில்லாத உண்மை. அதற்கான முழு ஆதாரங்கள் எங்களிடம் உள்ளன.

இது தவிர சிரியாவின் மற்றொரு அண்டை நாடும் அல்-ஆசாத் அரசைக் கவிழ்ப்பதில் பங்கு வகித்தது. அத்தகைய நடவடிக்கைகளை அந்த நாடு தொடர்ந்து மேற்கொண்டுவருகிறது.

கிளர்ச்சியாளர்களால் ஆபத்து என்று ஈரான் உளவு அமைப்புகள் அல்-ஆசாத் அரசிடம் கடந்த மூன்று மாதங்களாகவே எச்சரித்துவந்தன. ஆனால் எதிரிகளை அவர் அலட்சியப்படுத்திவிட்டார்.

அல்-ஆசாத் அரசு கவிழ்ந்ததால் ஈரான் பலவீனமடைந்ததாகக் கூறுவது தவறான கருத்து. உண்மையில் எங்கள் பலம் இன்னமும் அதிகரிக்கத் தான் செய்யும். எவ்வளவு அதிகம் அழுத்தம் தரப்படுகிறதோ அவ்வளவு அதிகம் எதிர்ப்பு சக்தி எழும். எந்த அளவுக்கு அதிக குற்றம் செய்யப்படுகிறதோ அந்த அளவுக்கு அதிக தீவிரத்துடன் எதிர்த்துப் போராடுவோம் என தெரிவித்தார்.

அல்-ஆசாத் அரசு வீழ்ந்ததற்குப் பிறகு முதல் முறையாக பொதுவெளியில் தற்போது பேசியுள்ள அயதுல்லா கமேனி இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார். ஆட்சிக் கவிழ்ப்பில் பங்கேற்ற அண்டை நாடு என்று அவர் பெயர் குறிப்பிடாமல் சொன்னது துருக்கி என்று நம்பப்படுகிறது. அந்த நாட்டின் ஆதரவு பெற்ற படையினர் இந்த நடவடிக்கையில் முக்கிய பங்கு வகித்தனர்.

முன்னதாக அல்-ஆசாத் அரசு வீழ்ந்ததைத் தொடர்ந்து அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் வெளியிட்ட அறிக்கையில், ஹிஸ்புல்லா படையினருக்கு எதிரான போரில் இஸ்ரேலுக்கு உதவியது. சிரியாவில் ஈரான் ஆதரவுப் படையினர் மீது தாக்குதல் நடத்தியது போன்ற நடவடிக்கைகள் மூலம் அல்-ஆசாத் ஆட்சிக் கவிழ்ப்பில் தங்கள் நாடு பங்குவகித்ததாகத் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

## கார் திருப்தியில்லை

### அதிருப்தி அடைந்த நபரின் அதிரவைத்த முடிவு

(வோஷிங்டன்)

கார் வாங்கி அதிருப்தி அடைந்த வாடிக்கையாளர் விற்பனை நிலைய கண்ணாடிக் கதவை உடைத்துக் கொண்டு வந்து காரை நிறுத்தும் வீடியோ இணையத்தில் பரவிவருகிறது. அமெரிக்காவின் உட்டா மாகாணத்தில் ஒரு கார் விற்பனை நிலையத்தில் மைக்கேல் முர்ரே என்பவர் புதிய காரை பதிவு செய்து வாங்கினார்.

காரை ஓட்டிச் சென்ற சிறிது நேரத்தில் அவர் திரும்ப வந்தார். "கார் திருப்தியில்லை, காரை திரும்பப் பெற்றுக் கொள்ளுங்கள்" என்று விற்பனை நிலைய அதிகாரிகளிடம் முறையிட்டார். ஆனால் "விற்பனை செய்த காரை திரும்பப் பெறுவதில்லை" என்று அதிகாரிகள் பதிலளித்தனர்.

இதனால் மைக்கேல் ஆத்திரம் அடைந்தார். "ஸ்ரோர் ரூம் கதவை உடைத்துக் கொண்டு காரை ஓட்டுவேன்" என்று ஆவேசமாகத் தெரிவித்தார்.


அதற்குக் கார் நிறுவனத்தினர் "மிரட்டல் வேண்டாம்" என்று கூறி அவரை அனுப்பினர். அவசரமாக வெளியே சென்ற மைக்கேல் தான் சொன்ன படியே புதிய காரை ஓட்டி வந்து விற்பனை நிலையத்தின் முன்பக்கக் கண்ணாடிக் கதவை உடைத்தார். இது தொடர்பாக அவர் பொலிஸில் ஒப்படைக்கப்பட்டார்.

கண்ணாடிக் கதவு மேசை உள்ளிட்ட பொருட்கள் நொறுங்கி சிதறும் வீடியோ எக்ஸ் வலைத்தளத்தில் வெளியாகி வைரலானது. ஒரு கோடியே 75 லட்சம் பேர் வீடியோவைப் பார்வையிட்டு உள்ளனர். (நி-8)





## சீனாவில் உலாவரும் பொலிஸ் ரோபோ





(பீஜிங்)

சீனாவில் ஏ.ஐ. எனப்படும் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்துடன் கூடிய கோள வடிவிலான பொலிஸ் "ரோபோ" தெருக்களில் ரோந்து செல்லும் காட்சிகள் சமூக வலைதளங்களில் பரவி வருகிறது.

இந்த "ரோபோ" வழக்கமான ரோபோக்கள் போல் அல்லாது கண்காணிப்பு வசதிக்காக பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்டுள்ளது. குற்றவாளி களை துரத்தவும் அவர்களை பிடிக்கவும் இந்த ரோபோ உபயோகமாக இருக்கும். நீரிலும் நிலத்திலும் தடையின்றிச் செயற்படும் வகையில் உருண்டை வடிவில் வடிவமைக்கப்பட்ட இந்த ரோபோ சுற்றுப்புறங்களை விழிப்புடன் கண்காணிக்கிறது.

அதிக ஆபத்தான சூழல்களிலும் செயற்படும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ள இந்த ரோபோ பொலிஸாருடன் சேர்ந்து ரோந்து செல்கிறது. மணிக்கு 35 கிலோமீற்றர் வேகத்தில் செல்லும் இந்த ரோபோவில் மேம்பட்ட சென்சார்களும் உள்ளன. இதன்மூலம் குற்றவாளிகளை அடையாளம் கண்டுபிடிக்கவும் முடியும்.


ரோபோக்கள் பயன்பாடு மருத்துவத்துறை, போக்குவரத்து, கல்வி, வாடிக்கையாளர் சேவை என பல துறைகளிலும் முக்கிய பங்காற்றி வருகிறமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நோய்களைக் கண்டறிவதில் மரபணு ஆய்வுகளின் பயன்பாடு ஒரு மேலோட்டமான நோக்கு


உடனுக்குடன் நோய்களைக் கண்டறிவது மூலம் ஒரு நோயாளி விரைவில் குணமடைவதை உறுதி செய்வதுடன் உயிரிழப்பையும் தவிர்க்க முடியும். நோய்களைக் கண்டறிவதற்குப் பல மருத்துவ பரிசோதனைகளை மருத்துவர்கள் ஆய்விற்காக ஆய்வு கூடங்களுக்கு அனுப்புவர். அத்தகைய ஆய்வுகளில் சில முக்கிய நோய்களைக் கண்டறிவதில் மரபணு ஆய்வானது மிக நம்பத்தகுந்தது எனலாம். அது பாரம்பரிய நோய்களை மட்டுமல்லாது மற்றைய நுண்ணுயிர்த் தொற்றுகளால் ஏற்படக்கூடிய நோய்களின் காரணிகளையும் கண்டறிவதில் அதிக பயன்மிக்கது. நுண்ணுயிர்த் தொற்றுகளால் ஏற்படக்கூடிய நோய்களின் காரணிகளையும் கண்டறிவதில் அதிக பயன் மிக்கது என்பதனை கொவிட்-19 வைரஸ் தொற்றுக் காலத்தில் மருத்துவ உலகால் உணர்ந்து கொள்ளப்பட்டது.

நோய்ப் பாதிப்பை முன்கூட்டியே அறிய மரபணுப் பரிசோதனை உதவுகிறது




பல மரபணுக்கள் ஒன்றிணைந்து இழைவடிவில் நிற மூர்த்தங்களாக உயிரினங்களின் கலங்களுள் காணப்படும். இவை இரு வகைப்படும். இரட்டை இழைகளாலான டி.என்.ஏ (DNA) மற்றும் ஒற்றை இழையாலான ஆர்.என்.ஏ (RNA) என்பனவே அவையாகும். மனிதர்களில் டி.என்.ஏ பெரும்பான்மையாக வும் நுண்ணுயிர்களில் ஆர்.என்.ஏ பெரும்பான்மையாகவும் காணப்படும். இந்த மரபணுக்களைப் பகுத்தாய்வதன் மூலம் நோய்க்குரிய காரணிகள் உள்ளனவா? இல்லையா? என்பதைத் தெளிவு செய்யலாம். பகுத்தாய்வு செய்வதற்குப் பலவித மரபணுப் பரிசோதனைப் படிமுறைகள் உள்ளன. இருப்பினும் ஒருவகை நொதியமான பொலிமறேஸ் என்னும் பல் சங்கிலித் தொடுப்பு வேதித்தாக்கத்தை நிகழ்த்தக்கூடிய வலுவுள்ளதை உபயோகித்து பி.சி.ஆர் (PCR) எனச் சுருக்கி அழைக்கப்படும். பொலிமறேஸ் செயின் றியாக்ஷன் (Polymerase Chain Reaction) என்னும் படிமுறையே மருத்துவ ஆய்வுகளுக்குச் சிறப்பான படிமுறையாகக் கருதப்படுகிறது. உதாரணமாக, கொவிட்-19 வைரஸ் தொற்றுக் காலத்தில் பல உயிரிழப்புகள் இடம்பெற்ற போது, வெகு குறுகிய காலத்தில் வைரஸ் தொற்று உள்ளதா? இல்லையா? என, பி.சி.ஆர் பரிசோதனை மூலம் நோய் அறி குறிகள் தென்பட்ட 24 மணித்தியாலங்களுக்குள் கண்டறியப்பட்டதால், நோய்ப் பரம்பலும், அநாவசிய உயிரிழப்புகளும் தவிர்க்கப்பட்டன. பழைய படி முறைகள் மூலம் வைரஸைக் கண்டறிய 7-14 வரையிலான நாட்களோ அல்லது அதற்கு மேற்பட்ட நாட்களோ தேவைப்பட்டன. இதனால் மேலும் பல்லாயிரக்கணக்கில் உயிரிழப்புகளையும் நோய்ப் பரம்பலையும் உலகு அன்று எதிர் நோக்கியிருந்தி ருக்கும். நோய்த் தடுப்பூசி தயாரிப்பிலும் மரபணு ஆய்வு இன்றியமையாத ஒன்று.

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்க A பிரிவு




இதேபோன்று மலேரியாத் தொற்றுகளிலும், நோய்க்காரணியைக் கண்டறிவதில் தற்போதுள்ள படிமுறைகள் [illegible] மூலம் மைக்ரோஸ்கோப் எனும் நுண்ணோக்கி ஊடாக நோக்கும் இரத்த பரிசோதனை, திறன்மிகுந்த ஆய்வு கூடப் பரிசோதனையாளர்களில் தங்கியிருப்பையும் கொண்டுள்ளன. அத்துடன் இரத்தத்தில் மலேரிய நுண்ணுயிரியின் தொற்றுவீதம் குறைவாக உள்ள போது இத்தகைய படிமுறைகளால் தொற்றைக் கண்டு கொள்தலும் கடினம் என்பதால் நோய்த் தாக்கம் அதிகரித்து நோயாளி மிகவும் பாதிப்பிற்குள்ளாகலாம். குறிப்பாக, பிளாஸ் மோடியம் ஃபல்சிபாரம் எனும் மலேரிய நுண்ணுயிரானது மூளைக்கும் இரத்தத்திற்கும் இடையே உள்ள தடுப்பு மென்சவ்வு களைக் கடந்து இரத்தத்திலிருந்து மூளைக்குள் பரவி மூளைப்பாதிப்பை ஏற்படுத்த வல்லது என்பதால் தொற்றானது சிறுவீதத்தில் உள்ளபோதே கண்டுபிடித்து சிகிச்சை அளிப்பது இன்றியமையாதது. இந் நுண்ணுயிரிகளின் மரபணுக்களைப் பி.சி.ஆர் எனும் படிமுறை மூலம் அவை குறைந்தளவில் இரத்தத்தில் உள்ள போதும் கண்டு பிடித்துச் சிகிச்சையை ஆரம்பித்து விடலாம்.

புற்றுநோயைக் கண்டுபிடிப்பதிலும், புற்றுநோய்த் தடுப்பிலும், ஒருவரின் உடலில் புற்று நோயானது சிகிச்சையின் பின் மீந்துள்ள நோய் பாதிப்புற்ற கலங்களின் இருப்பு வீதம் பற்றி அறிதலிலும் பி.சி.ஆர் எனும் மரபணுப் பரிசோதனைப் படிமுறை மிக்க உபயோகமானது. சில புற்று நோய்கள் பரம்பரையாக கடத்தப்படவல்லவை. உதாரணமாக மார்பகப் புற்றுநோயானது பல தலைமுறைகளுக்குக் கடத்தப்படக்கூடிய தொன்று. இப் புற்று நோய்க்கான மரபணுக்கள் BRCA1, BRCA2 நன்கு அறியப்பட்டவை. ஒரு குடும்பத்தில் மார்பகப் புற்றுநோயிருப்பின், மற்றைய குடும்பப் பெண்களிற்கும் மரபணுப் பரிசோதனைகளைச் செய்வித்து, இம் மரபணுக்கள் இருப்பதனை அல்லது இல்லாததை உறுதி செய்து புற்று நோய்வருவதற்கு வாய்ப்புகள் உண்டா? என்பதை அறிந்து கொண்டு தகுந்த முற்பாதுகாப்பை ஏற்படுத்திக் கொள்ளலாம்.

இதே போல குருதி உறையுந்தன்மை அதிகரித்தால் (த்றொம்போஃபிலியா) ஆழமான நாளங்களில் குருதிக் கட்டிகள் தோன்றி அவை பல்வேறு உடற் பகுதிகளில் பாதிப்பை ஏற்படுத்தும். இதனால் மூச்சுத்திணறல், மாரடைப்பு, உயிரிழப்பு, கருத்தங்காமை போன்றவை நிகழும் வாய்ப்புகள் அதிகரிக்கும். இத்தகைய அதீத குருதி உறையுந் தன்மையைக் கண்டுபிடிக்க FVL, PGM எனும் இரு மரபணுக்கள் உள்ளனவா? என ஆய்வதன் மூலம் தக்க சிகிச்சையை முற்பாது காப்பாக அளிக்க முடியும்.

மற்றும் பரம்பரை ஊடாகக் கடத்தப்படும் ஒருவித இரத்தச் சோகை நோய்களான தலஸீமியா, ஸிக்கிள் செல் அனீமியா போன்றவற்றையும் அவற்றிற்குரிய மரபணுக்கள் உள்ளனவா? என ஆய்வதன் மூலம் அறிந்துகொண்டு தக்க சிகிச்சையை முற்பாதுகாப்பாக அளிக்க முடியும். இவை தக்க முறையில் கண்டறியப்படாவிட்டால், சாதாரண இரத்தச் சோகை என இரும்புச் சத்து நிறைந்த சிகிச்சைகளைத் தவறாக வழங்குவதற்கும் சந்தர்ப்பம் உண்டு. இத்தகைய தவறான சிகிச்சையால் உடலில் அதிக இரும்புச் சத்துத் தேங்கி வேறு பாதிப்புகளை (அதீத இரும்புச்சத்து உடலில் படிவதால் நச்சுத் தன்மை ஏற்பட்டு ஈரற்பழுது) ஏற்படுத்தி விடும். ஆகையால் மரபணுப் பரிசோதனை மூலம் இந்நோய்களின் இருப்பை அறிதல் இன்றியமையாததாகிறது.

இம் மரபணுக் காரணிகளை ஆய்ந்தறிவதன் மூலம், வளர்ச்சியுற்ற நாடுகளில் மரபணு மாற்றுச் சிகிச்சை வழங்கி நோயாளரின் வாழ்க்கைத் தராதரத்தை உயர்த்தியுள்ளார். குறிப்பாக ஸிஸ்டிக் ஃபைப்ரோஸிஸ் என்னும் ஒருவகை நுரையீரற் பாதிப்பை ஏற்படுத்தும் நோய்க்கு இம் மரபணு மாற்றுச் சிகிச்சை பெருமளவில் பயனளித்துள்ளது. இந் நோயால் பாதிக்கப்பட்டோர் சுவாசிப்பதற்கு மிகவும் அவஸ்தைப்படுவர். நுரையீரற் குழாய்களை வறட்சி மிகுந்த சளி அடைத்துக் கொள்வதால், இந் நோயாளிகள் சுவாசிப்பதற்கு மிகவும் கடினமாக இருக்கும். இதனால் இவர்களுடைய வாழ்நாளும் மிகக் குறுகியதாகவே இருக்கிறது. இவர்கள் பதின்ம வயதைத் தாண்டுவதே வெகு அபூர்வம். மரபணு மாற்றுச் சிகிச்சையால் இவர்களுடைய வாழ்வுக்காலம் நீடிக்கப்பட்டு, வாழ்க் கைத்தரம் உயர்த்தப்பட்டு உள்ளது. மேலே குறிப்பிட்ட நோய்களும் மரபணு ஆய்வுகளும் ஒரு சில உதாரணங்களே. ஒவ்வொரு மனிதரின் மரபணுக்களும் தனித்துவமானவை என்பதால் இனிவருங் காலங்களில் மரபணு ஆய்வை உபயோகித்து, ஒவ்வொருவருக்கும் ஏற்ற வகையில் மருத்துவ சிகிச்சை அளிக்கும் வாய்ப்பு ஏற்படலாம் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

**புனிதா கணேஸ்வரன்,**
**இளைப்பாறிய உயிர் மருத்துவ விஞ்ஞானி,**
**இங்கிலாந்து.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறந்த நிலையில் கரை ஒதுங்கிய இராட்சத திமிங்கலம்



(மன்னார்)

இராமநாதபுரம் அருகே பாம்பன் கடற்கரையில் 2 தொன் எடையும் 18 அடி நீளமும் கொண்ட இராட்சத திமிங்கலம் ஒன்று நேற்று முன் தினம் இறந்த நிலையில் கரை ஒதுங்கியது.

இறந்த நிலையில் கரை ஒதுங் கிய இந்த இராட்சத திமிங்கலத்தை பார்ப்பதற்கு அந்தப் பகுதியைச் சேர்ந்த மக்கள் மற்றும் மீன வர்கள் கடற்கரையில் திரண்ட னர்.

பாம்பன் தெற்கு மீன்பிடித் துறை முகத்துக்கு அருகே கடற்கரையில் இராட்சத திமிங்கலம் ஒன்று இறந்த நிலையில் கரை ஒதுங்கி இருப்பதை அவதானித்த மீனவர்கள் அதனை வனத்துறை அதிகாரிகளுக்கு தெரி யப்படுத்தியதையடுத்து அங்கு வந்த வனத்துறையினர் கரை ஒதுங்கிய திமிங்கல உடலை ஜே.சி.பியின் உதவியுடன் மீட்டு கால்நடை மரு த்துவரை கொண்டு இறந்த திமிங் கலத்தை உடற்கூறு ஆய்வு செய்து கடற்கரை மணலில் புதைக்கும் பணியினை முன்னெடுத்து இருந்த னர். (6-8-285)

# சமய தீட்சையும் சர்வாலய தீபமும்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை, தெக்கணப்பாய் அருள்மிகு கண்ணகாம்பிகா சமேத கண்ண்லிங்கேஸ்வரர் ஆலய கண்ணகியம்மன் ஆலயங்களில் நாளை சனிக்கிழமை காலை 8 மணிக்கு சமயதீட்சை வழங்கும் நிகழ்வும் பிற்பகல் 2.30 மணிக்கு சர்வாலய தீப உற்சவமும் தொடர்ந்து மாலை 3.30 மணிக்கு லலிதா சகஸ்ரநாம அர்ச்சனையும் இடம்பெறும் என ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (6-8)

# ஆதனப் பெயர்மாற்றம்

யாழ்ப்பாணம் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் 18 கொழும்புத்துறை சென்மேரிஸ் தேவாலய முதலாம் ஒழுங்கையில் அமைந்துள்ள ஆதன இலக்கம் 20/1 ஆதனத்தின் ஆதனப் பெயரானது எமது ஆதனப்பதிவேட்டில் இமானுவேல் ஞானப்பிரகாசம் என பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனம் யாழ்ப்பாணம் நொத்தாரிசு S.K. ஆபிரகாம் என்பவர் முகதாவில் 1911.07.29 ஆம் திகதி 5307 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய உறுதி தொலைந்து விட்டதாக யாழ்ப்பாண காணிப்பதிவகத்தினால் கடிதம் வழங்கப்பட்டுள்ளது.

குறித்த ஆதனம் யாழ்ப்பாணம் கொழும்புத்துறையைச் சேர்ந்த அந்தோனிமுத்து ஞானப்பிரகாசம் பெண் பற்றிமா மெக்டலினா என்பவர் நொத்தாரிசு J.S.A.மதுரநாயகம் என்பவர் முகதாவில் 2016.02.23 ஆம் திகதி 2438 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய நன்கொடை உறுதி மூலம் தனது புத்திரன் அனி பேஷன்ட் ஞானப்பிரகாசத்திற்கு வழங்கியுள்ளார்.

குறித்த ஆதனம் யாழ்ப்பாணம் கொழும்புத்துறையைச் சேர்ந்த அனி பேஷன்ட் ஞானப்பிரகாசம் என்பவர் நொத்தாரிசு J.S.A.மதுரநாயகம் என்பவர் முகதாவில் 2016.02.24 ஆம் திகதி 2439 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய நன்கொடை உறுதி மூலம் தனது தாயார் அந்தோனிமுத்து ஞானப்பிரகாசம் பெண் பற்றிமா மெக்டலினாவிற்கு வழங்கியுள்ளார்.

**ஆதன அட்டவணை**

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாணப்பகுதி, சுண்டிக்குளி கோவிற்பற்று, கொழும்புத்துறை இறை பிரதேசசெயலகர் பிரிவு யாழ்ப்பாணம் கிராமசேவகர் பிரிவு J/61 "பயற்றம்புலம் உம் சொத்தான் வளவும்" நிலப்பரப்பு 5 (ஐந்து)ம் மற்றும் அதற்குச் சேர்ந்தவைகளும். ஆனால் இது பின்னர் 2011.09.09 இல் உத்தரவு பெற்ற நில அளவையாளர் மெல்வின் ஞானப்பிரகாரம் அவர்களால் 580 ஆம் இலக்கத்தில் அளந்து வரையப்பட்ட நில அளவைப் படத்தில் Lot எனக் குறிப்பிடப்பட்ட பகுதியாகிய நிலப்பரப்பு 03 (மூன்று) குளி 10:50 (பத்து தசம் ஐந்து சைபர்)

இந்த நிலப்பரப்பு 03 குளி 10:50 இற்கும் எல்லை:

கிழக்கு -கத்தோலிக்க ஆலயத்துக்குரிய ஆதனம்
வடக்கு -ஸ்ரனிஸ்லோஸ் இன் ஆதனம்
மேற்கு - பிரான்சிஸ் சேவியரின் ஆதனம்
தெற்கு - ஒழுங்கை
இதடங்கலும் இதற்குச் சேர்ந்தவைகளும்

தற்போது இவ்வாதனத்தை அந்தோனிமுத்து ஞானப்பிரகாசம் பெண் பற்றிமா மெக்டலினா என்பவர் தனது பெயரை எமது ஆதனப்பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்ய விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்திற்கு முழுமையாகவோ அல்லது பகுதி அளவிலோ உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒருமாத காலத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும், உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது அந்தோனிமுத்து ஞானப்பிரகாசம் பெண் பற்றிமா மெக்டலினா என்னும் பெயருக்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர்மாற்றம் செய்யக்கூடிய எப்பொறுப்பிற்கும் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**ஆணையாளர்,**
**மாநகரசபை, யாழ்ப்பாணம்.** (C-1784)

# இன்று முருகனுக்குரிய அநுக்கிரக கார்த்திகைத் திருநாளில் இது திருப்புகழும் மார்கழி மாதம், அனைத்து ஆலயத்திலும் திருவாசகம் ஓதி ஈழத்துச் சிதம்பர ஆலயம் கும்பாபிஷேகம் நடைபெற ஐந்து தேரும் ஓடக்கண்டு தரிசிப்போம்

**அருணகிரி நாதர் திருப்புகழ்-432-வடமலை**
**முக்கிய மந்திரம் நாமம்-நாம்படுகின்ற துன்பம்**
**நற்கதிபெற அடியவர்களின் மனதில் முருகன் குடிகொள்ள**
**நல்லசமயக்கல்வி, செல்வம், ஆணவம் நீங்க**
**ஜனனம் மரணம் நீங்கவும்**
**கதியும், உனது திருவடிகளில் நிழல் தருவதும்**

சரவண பவநிதி யறுமுக குருபர
சரவண பவநிதி யறுமுக குருபர
சரவண பவநிதி யறுமுக குருபர எனவோதித்
தமிழினி லுருகிய வடிவயரிடமுறு
சனன மரணமதை யொழிவுற சிலமுற
தருபிணி துளவர மெமதுயிர் சுகமுற வருள்வாயே
கருணைய விழிபொழி யொருதனி முதலென
வருகிரி திருமுகர் துணைகொளு மிளையவ
கவிதை யமுதமொழி தருபவ ருயிர்பெற வருள்
கடலுல கினில் வரு முயிர்படு மவதிகள்
கலகமி னையதுன கழியவும் நிலைபெற
கதியு முனதுதிரு வடிநிழல் தருவது மொருநாளே
திரிபுர மெரிசெயு மிறையவ ரருளிய
குமரச மரபுரி தணிகையு மிகுமுயர்
சிவகிரி யிலும்வட மலையிலு முலவிய வடிவேலா
தினமு முனதுதுதி பரவிய அடியவர்
மனது குடியுமிரு பொருளிலு மிலகுல
திமிர மலமொழிய தினகர னெனவரு பெருவாழ்வே
அரவணை மிசைதுயில் நரகரி நெடியவர்
மருக னெனவெவரு மதிசய முடையவ
அமலி விமலிபரை உமையவ ளருளிய முருகோனே
அதல விதல முதல் கிடுகிடு கிடுவென
வருமயி லினிதொளிர் வுடுமையில் நடுவுற
அழகினுடனமரு மரகர சிவசிவ பெருமானே

சரவணபவனே! என் நிதியே! அறு முகனே! குருபரனே!

சரவணபவனே! என் நிதியே! அறுமுகனே! குருபரனே! சரவணபவனே! என் நிதியே! அறுமுகனே! குருபரனே! என்று பலமுறை ஓதி, அடியவர்கள் உற்ற கடல்சூழ்ந்த இவ்வுலகில் வெள்ள அனர்த்தம், துன்பங்கள், கலக்கங்களும் இவ்வாறு இன்னும் ஆலய புனருத்தானங்கள், தடைகள் கோடு வழக்கு, எவ்வுயிர்க்கும் இத்தகையானவாய் உள்ள வேதனைகளும் கழிந்து நீங்கவும், அடியோர் நற்திசையைப் பெறவும், உனது திருவடி நிழல் தருகவென தமிழ் பாடல்களாகிய திருவாசகம், திருமுறை, ஓதி உரிகிய அடியார்களுக்கு உற்ற பிறப்பு நீங்குதல், உற்ற சிவப்பேறு உற, மேலும் வரும் பிணிகள் நம்மைவிட்டு குதித்து ஓடவும் எமது உயிர் சுகமுற வரம் அருள்போயே!

சிவன் அருளிய குமரனே! திக்கரை முருகா! நல்லூரானே! கதிர்காமக் கந்தன்! திருச் சந்நிதியானே! திருப்போருரானே! திருத்தணியகையானே! பழனியானே! வடமலை உலவும் எங்கள் கந்தனே. சக்தி-சிவம் எனும் இருபொருள்களிலும் ஈழத்துச் சிதம்பரத்தானே! நற்கல்வி யும் நற்செல்வமும் இரண்டிலும் விளங்குபவனே! நமது இருண்டு ஆணவ மலம் நீங்க ஞானசூரியன் என்றும் பெரும் வாழ்வே அருள்மிகு அதிசயம் மூர்த்தியே! திருமாலின் மருகனே! அமலி விமலி (மலமற்றவள்) பரை உமையவள் அருளிய குழந்தையே அதலம் விதலம் ஆகிய ஏழு உலகுகளும் கிடுகிடு என நடக்க வருகின்ற மயிலில் வருகின்ற ஆறெழுத்து மந்திரத்தில் மத்தியில் அழகுடன் பொருந்தியுள்ள ஹரஹர சிவசிவ பெருமானே! வணக்கம்.

உலகத்திலே மார்கழிமாதம் ஐந்து தேர் ஓடும் [illegible] மற்றது [illegible]

மாணிக்கவாசகர் போற்றிப்பனுவல்கள்

தலபுராணங்களில்-26 ஆவது புள்ளிருக்கும் வேளூர்ப்புராணம்

வழுதிமனு நெறிசெலுத்தி மந்திரியாய் புரவிகொள வந்த செம்பென்

முழுதும் வளர் திருப்பணிசெய் திலகு திருவாசமு மொழிந்து பாரோர்

தொழுது சிரமேற் கொண்டு துதிப்ப திறை கோவை யாய்த் துறைகள் யாவும்

பழுதுபடா தெடுத்துரைத்த வாதவூ ரன்பர் பதம்பணிதல் செய்வோம்.

புள்ளிருக்கு வேளூர்ப் புராணம்

16.12.2024- 29.01.2025 அன்றைய தினம் வரையும் திருவாசகமும் மேற்காட்டிய மாணிக்கவாசகர் புராணமும் திருப்புகழும் ஓதி ஈழத்தில் உள்ள இலங்கை மக்கள் அனைவரும் வழிபாட்டுக்குரிய ஈழத்துச் சிதம்பரம் ஐந்து தேர்களும் ஓட எம்பெருமான் நல்லூர்க்கந்தப் பெருமானையும் சிதம்பரத்தானையும் பூரண பூட்களை ஐயனாரையும் வழிபடுவோம்.

எனவே உயிர்கள் சிவபுண்ணியங்களை இயற்றித் திருவருள் பெற்றுப் பாசச்சார்பினை நீக்கவும் ஈழத்துச் சிதம்பரம் ஐந்துதேர் ஓடவும், நமது துன்பம் நீங்கவும் ஆணவம் நீங்கவும் சனன மரணம் நீங்கவும் மார்கழி மாதம் பூராகவும் திருவாசகம் ஓதுவோம். தினம் திருப்புகழ் ஓதுவோம்.

(c-1696)

**க.கு.க சிவபாவன்,**
**மாணிக்கவாசகர் மடாலயம்,**
**செயலாளர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கல்கியின் பாகம் - 3

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 654





வழித்துணை போக மறுத்தது பற்றி நெடுங்காலம் வருந்த வேண்டியிராதா? ஆயினும் என்ன செய்வது? முதன் மந்திரியும் இளைய பிராட்டியும் இட்ட கட்டளை மிகக் கண்டிப்பானது. வேறு காரியங்களில் நான் இப்போது தலையிட முடியாது. முன்னர் சில முறை அப்படிச் சம்பந்தமில்லாத காரியங்களில் தலையிட்டுத் தொல்லைப்பட்டதெல்லாம் போதும். ஆழ்வார்க்கடியான் வேறு எச்சரித்திருக்கிறான். அன்றியும் வானதி தேவியைத் தான் நாகைப்பட்டினம் சூடாமணி விஹாரத்துக்கு அழைத்துச் செல்வதென்பது கனவிலும் நினைக்க முடியாத காரியம்.

இவ்வாறு முடிவு செய்த வந்தியத்தேவன் குதிரையைக் கொள்ளிடக்கரைப் பாதையில் திருப்பினான். அதே சமயத்தில் 'வீர்' என்ற ஓர் அபயக்குரல், மிக மிக இலேசான பெண் குரல், ஒலித்ததாகத் தோன்றியது, திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தான், பல்லக்கைக் காணவில்லை. அங்கேயிருந்த சாலைமுடுக்கில் திரும்பியிருக்கக்கூடும். ஆயினும் போய்ப்பார்த்து விட வேண்டும் என்ற முடிவுக்கு ஒரு கணத்தில் வந்து விட்டான் வந்தியத்தேவன். அதனால் அப்படியொன்றும் தாமதம் ஏற்பட்டுவிடப் போவதில்லை. குதிரை பாய்ந்து சென்றது. வெகுசீக்கிரத்தில் சாலை முடுக்கின் அருகில் வந்து விட்டது. அங்கே அவன் கண்ட காட்சி வந்தியத்தேவனுடைய இதயமே நின்றுவிடும்படி செய்தது. பெண் ஒருத்தி ஓரத்து மரம் ஒன்றில் கட்டப்பட்டிருந்தாள். அவளுடைய வாயில் துணி அடைக்கப்பட்டிருந்தது. இருட்டும் நேரமாதலால் யார் என்று முதலில் தெரியவில்லை. அருகில் சென்று பார்த்தான். வானதியின் பல்லக்குடன் நடந்து சென்றது சேடிப் பெண் என்று தெரிந்தது. அவள் முனகிக் கொண்டே தன் கட்டுக்களை அவிழ்த்துக் கொள்ள முயன்று கொண்டிருந்தாள். வந்தியத்தேவன் குதிரையிலிருந்து பாய்ந்து இறங்கி, முதலில் வாயில் அடைத்திருந்த துணியை எடுத்து விட்டு, கட்டுக்களையும் அவிழ்த்து விட்டான். அவ்வளவு பலமாகக் கட்டப்படவில்லை என்பது அவன் உள் மனத்தில் பதிந்தது.

"பெண்ணே என்ன நடந்தது? சீக்கிரம் சொல்! பல்லக்கு எங்கே? உன் எஜமானி எங்கே?" என்று பதறிக் கொண்டே கேட்டான். சேடிப் பெண் உளறிக் குளறி மறுமொழி கூறினாள். அந்தச் சாலை முடுக்கில் பல்லக்குத் திரும்பியபோது திடீரென்று ஏழெட்டு மனிதர்கள் பக்கத்து மரங்களின் மறைவிலிருந்து பாய்ந்து வந்தார்கள். அவர்கள் சிலருடைய கைகளில் மண்டை ஓடுகளும் சூலாயுதங்களும் காணப்பட்டன. அவர்களில் இரண்டு பேர் சேடிப் பெண்ணை மண்டையில் அடித்துக் கீழே தள்ளினார்கள். வாயில் துணியை அடைத்தார்கள். இதற்குள் மற்றவர்கள் பல்லக்குச் சுமந்தவர்களிடம் ஏதோ பயங்கரமான குரலில் சொல்லவே, அவர்கள் பாதையை விட்டு விலகிக் குறுக்கு வழியில் பல்லக்குடன் ஓடினார்கள். மற்றவர்களும் தொடர்ந்து போனார்கள், வானதி தேவியின் குரலே கேட்கவில்லை. இவ்விதம் கூறிவிட்டு, பல்லக்குச் சென்ற குறுக்குப் பாதையையும் அச்சேடிப்பெண் சுட்டிக் காட்டினாள்.

"பெண்ணே! நீ அந்தக் குடந்தை சோதிடர் வீட்டிற்குப் போயிரு! நான் உன் எஜமானியைக் கண்டுபிடிக்கப் பார்க்கிறேன்" என்று சொல்லிக் கொண்டே வந்தியத்தேவன் குதிரை மீது பாய்ந்து ஏறினான். குதிரை இராஜபாட்டையிலிருந்து திரும்பிக் குறுக்கு வழியில் சென்றது.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## அன்னமும் காகமும்



ஒரு பூஞ் சோலையில் அன்னப் பறவை ஒன்று இருந்தது. அதே சோலையில் ஒரு காகமும் இருந்தது.

ஒரே சோலையில் இருந்தபடியால் இரண்டும் அடிக்கடி சந்தித்துக் கொள்ளும். சந்திக்கும்போது தான், தான் கண்டது கேட்டது பற்றி ஒன்றிடம் ஒன்று சொல்லிப் பேசிக் கொள்ளும்.

ஒரு நாள் அன்னம் எங்கோ போய்த் திரும்பி வந்தது. சிறிது நேரத்திற்குப் பின் அது திரும்பவும் புறப்பட்டது.

"அன்னம்மா, எங்கே புறப்பட்டு விட்டாய்?" என்று காகம் கேட்டது.காக்கையண்ணா, இந்தச் சோலையை அடுத்தாற்போல் அழகான குளம் ஒன்று இருக்கிறது. அங்கே சிவப்புச் சிவப்பாகவும் வெள்ளை வெள்ளையாகவும் அழகான தாமரைப் பூக்கள் மலர்ந்து விளங்குகின்றன. அவை அந்தக் குளத்தின் அழகை அதிகப்படுத்துகின்றன. அந்தக் குளத்திலேயே மிதந்து திரிந்து தென்றல் காற்றை அனுபவித்துக் கொண்டிருந்தாலே போதும். அதைக் காட்டிலும் இன்பம் வேறு கிடையாது. அந்தத்தாமரைக் குளத்துக்குத்தான் நான் போகிறேன். நீங்களும் வருகிறீர்களா ?" என்று கேட்டது அன்னப் பறவை.

"அவ்வளவு அழகான குளமா? அப்படியானால் வருகிறேன்," என்று காகமும் அன்னத்துடன் புறப்பட்டது.

அவை போகும் வழியில் காற்றில் அழுகிய பிணத்தின் நாற்றம் கலந்து வந்தது. காட்டுப் புறத்தில் ஓரிடத்தில் ஒரு கழுதை செத்துக் கிடந்தது. செத்து நான்கைந்து நாளாகிவிட்டபடியால் அது அழுகி நாற்றமெடுத்தது. காற்றில் வந்த அந்த நாற்றத்தை உணர்ந்ததும் காகம் அன்னத்தை நோக்கி "அன்னம்மா, தாமரைக் குளத்திற்கு நீ போ. நான் வரவில்லை" என்று கூறி விட்டுப் பறந்தது.

நேராகக் கழுதை அழுகிக் கிடந்த இடத்திற்குச் சென்றது.

அழுகிய பிணத்தைக் கொத்தித் தின்று கொண்டே, "இந்த இன்பம் கிடைக்குமா தாமரைக் குளத்தில்" என்று தன் மனதுக்குள்ளேயே கூறிக் கொண்டது.

கருத்துரை :- அன்னம் தாமரைக் குளத்தை நாடுவது போல் சுற்றோரைக் கற்றோர் விரும்புவர் காக்கை அழுகிய பிணத்தை விரும் புவது போல், தீயோரைத் தீயோரே விரும் பிச் சேர்வர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள் மனதிலிருந்து எழும் ஒழுக்கத்தின் குரல் உங்கள் பலவீனங்களை எதிர்த்து, சுதந்திரமான நிலைக்கு உங்களை எடுத்துச் செல்லும். - அறிஞர்

வலம்புரி

TP: 021 222 3378

website : www.valampurii.lk

# எமது அரச அதிகாரிகளை பலவீனப்படுத்தாதீர்கள்

சமூக வலைத்தளங்களின் அதீதமான வளர்ச்சி எந்தளவுக்குச் சாதகமாக இருக்கிறதோ அந்தளவுக்கு அது பாதகமாகவும் அமைகிறது.

ஆக, சமூக வலைத்தளங்களை எந்த நோக்கத்துக்காகப் பயன்படுத்துகின்றோம் என்பதைப் பொறுத்தே அதன் சாதக, பாதகத் தன்மைகள் தீர்மானிக்கப்படும்.

பொதுவில் எங்கள் நாட்டில் அதிலும் தமிழ் மக்களாகிய நம் மத்தியில் சமூக வலைத்தளங்கள் எவ்வாறாகப் பயன்படுத்தப்படுகின்றன என்பது குறித்து ஆராய்ந்தால், அதில் பாதகத்தன்மை மேலோங்கி இருப்பதைக் காண முடிகின்றது.

அதிலும் குறிப்பாக உண்மைக்குப் புறம்பான தகவல்களை சமூக வலைத்தளங்களில் பதிவேற்றம் செய்யும்போது, அதன் விளைவு ஒட்டுமொத்தத் தமிழினத்துக்கும் கேடுவிளைவிப்பதாக அமைகிறது.

அதாவது, அரச அதிகாரிகள் மற்றும் மருத்துவர்கள் தொடர்பில் அண்மைக்காலமாகக் கடும் விமர்சனங்கள் எழுந்துள்ளன.

உண்மையில் அரச அதிகாரிகள் மற்றும் மருத்துவர்கள் உள்ளிட்டோர் தவறிழைக்கும் போது அதனைச் சுட்டிக்காட்டுவது கட்டாயமானது.

அதேநேரம் தவறுகளைச் சுட்டிக்காட்டும் போது அதனால் சம்பந்தப்பட்ட துறைசார்ந்தவர்களுக்கு எந்தப் பாதகமும் ஏற்படாதவாறு பார்த்துக் கொள்வது மிகவும் அவசியமானது.

ஆம், ஒரு மருத்துவர் மீது குற்றச்சாட்டுக்களை முன்வைக்கும்போது அந்தக் குற்றச்சாட்டு ஒட்டுமொத்த மருத்துவர்களது மனங்களையும் அடித்து நொருக்குமாக இருந்துவிடக்கூடாது.

அதேநேரம் குற்றச்சாட்டுக்களை முன்வைக்கும்போது அங்கும் நயத்தக்க நாகரிகம் பேணப்பட வேண்டும்.

இதைவிடுத்து கிடைத்த சந்தர்ப்பத்தை பயன்படுத்த வேண்டும் என்ற நோக்கில் ஈவிரக்கமின்றி வார்த்தைகளை நாம் முன்வைப்போமாயின், அதனால் சம்பந்தப்பட்டவரும் அவரது குடும்பமும் கடும் மன உளைச்சலுக்கு ஆளாகின்ற பரிதாபநிலை ஏற்படும்.

இஃது சம்பந்தப்பட்டவர்கள் செய்த சேவையையும் அவமதிப்பதாக அமையும்.

எனவே எந்த விடயமாக இருந்தாலும் அதனை நயத்தக்க நாகரிகத்துடன் கையாள வேண்டும்.

இல்லையேல் நம் தமிழ் மண்ணில் வாழ்வது அவ்வளவு நல்லதல்ல என்ற மனநிலை நம்மவர்களிடம் ஏற்பட்டுவிடும்.

இதுதவிர, எமது அதிகாரிகள் மற்றும் துறைசார் நிபுணத்துவமுடையவர்கள் மீது கடும் விமர்சனங்களைச் செய்யும்போது அவர்கள் பலவீனப்படுகின்ற துர்ப்பாக்கிய நிலை ஏற்படும்.

அவ்வாறான சூழ்நிலையில் அவர்களுக்குப் பதிலான அதிகாரிகள் தென்பகுதியிலிருந்து இங்கு வருகின்ற நிலைமையும் உருவாகலாம்.

எனவே விமர்சனங்களும் தவறுகளைச் சுட்டிக்காட்டுகின்ற தன்மைகளும் நம்மவர்களை வினைத்திறனுடையவர்களாக ஆக்குவதாக இருக்க வேண்டும். அப்போதுதான் விமர்சனங்கள், கருத்துக்கள் எம் இனத்துக்கும் எம் மக்களுக்கும் ஆரோக்கியமானதாக - சாதகமானதாக அமையும்.

### யாழில் சோலர் அனுமதியில் முறைகேடு

# பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்க

## பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் பெரும் சர்ச்சைக்கு உள்ளாகி இருக்கும் சோலர் அனுமதி வழங்கல் தொடர்பில் இலங்கை மின்சார சபையின் யாழ்ப்பாணப் பிராந்தியப் பொறியியலாளர் அலுவலகம் தவறிழைத்திருப்பதாகக் குறிப்பிட்டுள்ள இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு பாதிக்கப்பட்ட பாவனையாளருக்கு உடனடியாக நீதி வழங்குமாறு பணித்துள்ளது.

மேலும் பாவனையாளர் ஒருவருக்கு இணைப்பு அனுமதி வழங்குவதற்காகப் பாவனையாளரிடமிருந்து பணம் அறவிடப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்படும் உள்ளக சுற்று நிருபங்கள் அல்லது பொது நடைமுறைகள் மற்றும் ஆவணங்கள் ஏதுமிருப்பின் அது பற்றித் தங்களுக்கு அறியத்தருமாறும் இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் பாவனையாளர் விவகாரங்களுக்கான பணிப்பாளர் யசந்த ரதுவிதான இலங்கை மின்சார சபையின் பிரதம பொறியியலாளரைக் கடிதம் மூலம் கேட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் - சுன்னாகம் வாரியபுலம் பகுதியைச் சேர்ந்த மின் பாவனையாளர் ஒருவர் 2023 ஆண்டு விண்ணப்பித்த போது அவருக்கு அனுமதி வழங்காமல் 2024 ஆம் ஆண்டு விண்ணப்பித்த அதே இடத்தைச் சேர்ந்த மற்றொருவருக்குச் செல்வாக்கின் அடிப்படையில் பூர்த்தி செய்யப்படாத கட்டத்துக்கு அனுமதி வழங்கியமை தொடர்பாகச் செய்யப்பட்ட முறைப்பாட்டை அடுத்து அவருக்கு அனுமதியை வழங்குமாறு பணிக்கப்பட்ட பின்னரும் இணைப்புக்காக ரூபா 11 இலட்சம் செலுத்துமாறு கோரியமையை ஆதாரங்களுடன் மேன்முறையீடு செய்ததை அடுத்தே இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு, யாழ்ப்பாணம் பிராந்திய மின் பொறியியலாளருக்கு இவ்வாறு பணித்திருக்கிறது.

சுன்னாகத்தில் அமைந்துள்ள யாழ்ப்பாணப் பிராந்திய மின் பொறியியலாளர் அலுவலகத்தில் சோலர் அனுமதி பெறுவதற்காக விண்ணப்பிப்பவர்களில் பலருக்கு அனுமதி வழங்கப்படாமை அனுமதிவழங்கப்பட்டவர்களுக்கு மீற்றர் பொருத்துவதில் பாரபட்சம் காட்டுதல் போன்ற முறைகேடுகள் குறித்து இலங்கை மின்சார சபையின் தலைமை அலுவலகத்துக்கும், மின்வலுசக்தி அமைச்சுக்கும், இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவுக்கும் இதுவரை பல முறைப்பாடுகள் கிடைத்திருந்தன.

எனினும் இலங்கை மின்சார சபை அவற்றைக் கண்டும் காணாமல் முறையற்ற விதத்தில் பல அனுமதிகள் வழங்கப்பட்டமை தொடர்பில் ஜனாதிபதி செயலகத்தின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டதையடுத்து பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடியாக அனுமதியை வழங்குமாறு உத்தரவிடப்பட்ட போதும் பிராந்திய மின் பொறியியலாளர் அவை குறித்து கவனமெடுக்காமல் தொடர்ந்தும் முறையற்ற விதத்தில் சோலர் அனுமதிகளை வழங்கி வந்துள்ளார்.

அதைவிட அனுமதி வழங்கப்பட்டவர்களுக்கு மீற்றர்களைப் பொருத்துவதிலும் முறைகேடாக நடந்து கொண்டுள்ளார் என்று பாவனையாளர்கள் பலர் முறைப்பாடு செய்துமிருந்தனர்.

இதேநேரம் - இணைப்புக்கான அனுமதி வழங்கல் தொடர்பில் சுயாதீன விசாரணை ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டும் என்று மின்வலுசக்தி அமைச்சரிடம் நேற்று நேரடியாகவும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அனுமதிக்கு விண்ணப்பித்த ஒழுங்கு, அனுமதிக்காகப் பணம் செலுத்திய ஒழுங்கு, அனுமதி வழங்கப்பட்ட ஒழுங்கு உட்பட முறைகேடுகள் நடந்துள்ளன என்பதை உறுதிப்படுத்தக் கூடிய தகவல்களை இலங்கை மின்சார சபையிடமிருந்து தகவல் அறியும் சட்டத்தின் ஊடாக வாடிக்கையாளர்கள் பலர் கேட்டிருந்த போதிலும் இதுவரை அத்தகைய தகவல்கள் எவையும் வழங்கப்படவில்லை என்பதுவும் குறிப்பிடத்தக்கதாகும். (ம-7)

# இலங்கை ரூபாவின் பெறுமதி அதிகரிப்பு

(கொழும்பு)

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி மேலும் அதிகரித்துள்ளது.

இதன்படி இலங்கை மத்திய வங்கி வெளியிட்டுள்ள நேற்றைய நாணய மாற்று விகிதங்களுக்கு அமைய அமெரிக்க டொலரொன்றின் கொள்முதல் பெறுமதி 294.51 ரூபாவாக பதிவாகியுள்ளதுடன் விற்பனைப் பெறுமதியானது 285.94 ரூபாவாக பதிவாகியுள்ளது.

மேலும் கனேடிய டொலரொன்றின் கொள்முதல் பெறுமதியானது 209.48 ரூபாவாக பதிவாகியுள்ளதுடன் விற்பனைப் பெறுமதியானது 200.71 ரூபாவாக பதிவாகியுள்ளது.

இதேவேளை யூரோ ஒன்றின் கொள்முதல் பெறுமதி 311.16 ரூபாவாகவும் விற்பனைப் பெறுமதி 298.61 ரூபாவாகவும் பதிவாகியுள்ளது.

அத்துடன் ஸ்டெர்லிங் பவுண்ட் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 377.49 ரூபாவாகவும் விற்பனைப் பெறுமதி 363.51 ரூபாவாகவும் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

# அசாத் சாலி கைது சட்டவிரோதமானது

## உயர் நீதிமன்றம் தீர்ப்பு

(கொழும்பு)

முன்னாள் மேல் மாகாண ஆளுநர் அசாத் சாலி கைது செய்யப்பட்டமை சட்டவிரோதமானது என உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

இதற்கு நட்ட ஈடாக 75 ஆயிரம் ரூபா பணத்தைப் பிரதிவாதிகள் செலுத்த வேண்டும் எனவும் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

முன்னாள் பொதுப் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர மற்றும் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் (CID) பணிப்பாளர் ஆகியோர் இந்த வழக்கின் பிரதிவாதிகள் ஆவர்.

2021 மார்ச் 9 அன்று செய்தியாளர் சந்திப்பில் மதங்களுக்கு இடையே முறுகலை ஏற்படுத்தினார் என்ற குற்றச்சாட்டில் அசாத் சாலி 2021 மார்ச் 16 அன்று கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

# குரங்குகளுக்குக் கருத்தடை

## முன்னோடித் திட்டம் நேற்று முதல் ஆரம்பம்

அதிகரித்து வரும் குரங்குகளைக் கட்டுப்படுத்தும் வகையில் குரங்குகளுக்குக் கருத்தடை செய்யும் முன்னோடித் திட்டம் மாத்தளை மேல் ஹரஸ்கம பிரதேசத்தில் நேற்று வியாழக்கிழமை (12) ஆரம்பிக்கப்பட்டது.

இத்திட்டத்திற்கு அரசாங்கம் ரூபா 4.5 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் எதிர்காலத்தில் நாடு முழுவதும் விரிவுபடுத்தப்படவுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் மாத்தளை மாவட்டத்தில் பொறிகள் மற்றும் கூண்டுகளில் பிடிக்கப்படும் குரங்குகளை மீண்டும் அதே பகுதியில் விடுவிக்கப்படுவதற்கு முன்னர் கருத்தடைக்காக கிரிதலே விலங்குகள் நல மையத்திற்கு கொண்டு செல்லப்பட்டு விடுவிக்கப்படவுள்ளது. (ம-7)

### திருகோணமலை மூதூரில்

# ஐஸ் போதையுடன் குடும்பஸ்தர் கைது

திருகோணமலை, மூதூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் குடும்பஸ்தர் ஒருவர் 10 கிராம் ஐஸ் போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

திருகோணமலை பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினர் நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு இவரைக்கைது செய்துள்ளனர்.

போதைப்பொருள் கடத்தப்படுவதாக கிடைத்த இரகசியத் தகவலையடுத்து குறித்த இடத்துக்குச் சென்று குறித்த சந்தேக நபரை சோதனை செய்த போது அவரிடமிருந்து குறித்த போதைப்பொருள் கைப்பற்றப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் சந்தேக நபர் மேலதிக விசாரணைக்காக மூதூர் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டிருப்பதாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபாயகரமான எலிக்காய்ச்சல் பாதுகாத்துக் கொள்வது எப்படி?

கடந்த ஒருவார காலப்பகுதியில் காய்ச்சலால் பாதிக்கப்பட்ட சிலர் யாழ்.போதன வைத்தியசாலையில் மரணமடைந்தார்கள். இவர்கள் எலிக்காய்ச்சலால் பாதிக்கப்பட்டிருக்கலாம் எனப் பரவலாக நம்பப்படுகின்றது. எலிக்காய்ச்சல் என்றால் என்ன? இது எவ்வாறு பரவுகின்றது? இதிலிருந்து எவ்வாறு எம்மைக் காத்துக்கொள்வது? என்பது பற்றிப்பார்ப்போம்.

எலிக்காய்ச்சல் Leptospira interogans எனும் பக்ரீரியாவினால் ஏற்படுகின்றது. இந்தப் பக்ரீரியாவானது எலிகள், ஆடு, மாடு, எருமைமாடு, குதிரை, செம்மறியாடு, பன்றி மற்றும் நாய் போன்ற முலையூட்டிகளின் சிறுநீரில் காணப்படுகின்றது. சிறுநீரிலிருந்து சேற்று நீர், சதுப்பு நிலங்கள், கான்கள், குட்டைகள், ஓடைகள், சிறிய குளங்கள் போன்றவற்றில் இவை காணப்படுகின்றன. இந்த பக்ரீரியாக்கள் சில வாரங்களில் இருந்து சில மாதங்கள் வரை உயிர்வாழக்கூடியவை.

நாம் பாதணிகளை அணியாமல் சேற்றுநீரில் நடமாடும் போது அல்லது நீர்நிலைகளில் குளிக்கும்போது எமது உடலில் கிருமித்தொற்று ஏற்படலாம். கால்களில் சிறிய சிராய்ப்புக்காயங்கள், வெட்டுக்காயங்கள், புண்கள் காணப்பட்டால் இக்கிருமிகள் இலகுவில் தொற்றிக்கொள்கின்றன. மென்சவ்வுகள் உள்ள கண்கள், வாய், மூக்கு என்பவற்றினூடாகவும் நுளைகின்றன. அசுத்தமடைந்த நீரையோ உணவையோ உண்ணும்போது இந்தநோய் பரவ வாய்ப்புள்ளது.

எலிக்காய்ச்சல் முதல்முதலில் 1953 ஆம் ஆண்டில் இலங்கையில் கண்டுபிடிக்கப்பட்டது. இந்தநோய் இலங்கையின் தென், சப்ரகமுவ மற்றும் மேல் மாணங்களில் இரத்தினபுரி, கேகாலை, காலி, மாத்தறை, களுத்துறை மற்றும் பதுளை போன்ற மாவட்டங்களில் அதிகம் காணப்படுகின்றது.

பாதை தடைப்பட்டிருந்த காலத்தில் வடமாகாணத்தில் எலிக்காய்ச்சல் அதிகம் காணப்படவில்லை. அண்மைக்காலத்தில் வன்னிப்பகுதி, கிளிநொச்சி போன்ற இடங்களில் இருந்து நோயாளிகள் அனுமதிக்கப்பட்டிருந்தார்கள்.


அண்மையில் ஏற்பட்ட தாழமுக்கத்தினால் ஏற்பட்ட கனமழையைத்தொடர்ந்து யாழ்.குடாநாட்டில் வெள்ளம் ஏற்பட்டது. இதனால் எலிக்காய்ச்சல் பரவக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.




இது ஒரு அபாயகரமான நோயாகும். இதனால் சிறுநீரகச்செயலிழப்பு, ஈரல் பாதிப்பு, மூளை மென்சவ்வுகளில் அலற்சி, சுவாசப்பைகளில் குருதிப்பெருக்கு, உடற்குருதியமுக்கம் குறைவடைதல் மற்றும் இதயம் செயலிழத்தல் போன்ற பாரதூரமான பாதிப்புக்கள் ஏற்படலாம். இதனால் மரணம் ஏற்படலாம். 2023 ஆம் ஆண்டு இலங்கை முழுவதுமாக சுமார் 9000 பேர் இந்த நோயால் பாதிக்கப்பட்டுள்ளதுடன் சுமார் 200 பேர் மரணமடைந்தார்கள். மரண வீதம் 1.7 ஆகும்.

இனி இந்த நோயின் அறிகுறிகளைப்பார்ப்போம். நோயரும்பு காலம் 2 நாட்களில் இருந்து 30 நாட்கள் வரை நீடிக்கலாம். இந் நோய்வாய்ப்பட்டவரிற்கு கடும் காய்ச்சல் ஏற்படும். கடுமையான தசை வலிஏற்படுவது இந்தநோயின் சிறப்பியல்பு ஆகும். இதைவிட கண்கள் சிவப்படைந்து காணப்படும். இதை விட வறட்டு இருமல் மூச்செடுக்கச்சிரமம், சிறுநீர் குறைவாகப் போகுதல், கண்கள் மஞ்சளாகுதல், சிறுநீருடன் இரத்தம் வெளியேறுதல், சிறுநீர் கடும் தேநீர் நிறத்தில் வெளியேறுதல் போன்ற அறிகுறிகள் ஏற்படலாம். இந்த அறிகுறிகள் உள்ளவர்கள் உடனடியாக வைத்திய உதவியைப் பெறுதல் அவசியமாகும்.

இனி இந்நோயிலிருந்து எவ்வாறு பாதுகாத்துக்கொள்ளலாம் எனப் பார்ப்போம். முதலாவதாக சேற்று நிலங்களில் நடமாடும்போது பூட்ஸ் போன்ற பாதணிகளைப் பயன்படுத்த வேண்டும். சிறிய குளங்களில் நீராடுவதை தவிர்க்க வேண்டும். சுட்டாறிய நீரையும் சுத்தமான, நன்கு சமைக்கப்பட்ட உணவுகளையும் உண்ண வேண்டும். இறந்த விலங்குகளை கையுறை அணியாமல் தொடுவதைத் தவிர்க்கவேண்டும். கால்நடைகளுக்கு நோய் வராமல் தடுப்பூசிகளை ஏற்றிக்கொள்ளலாம். இந்த நோயினால் பாதிக்கப்படக்கூடிய விவசாயிகள் கான்களை சுத்திகரிக்கும் தொழிலாளிகள், இறைச்சிவெட்டுபவர்கள், மீன் விற்பவர்கள், கால்நடை வைத்தியர்கள், ஆய்வு கூட உதவியாளர்கள் என்பவர்கள் நோய் பரவக்கூடிய காலத்தில் டொக்சிசைக்கிளின் (Doxycyclin) ஒரு கிழமைக்கு இரண்டு Capsules படி எடுப்பதன் மூலம் தம்மைப் பாதுகாத்துக் கொள்ளலாம். இந்த மருந்தை பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் மூலம் MOH மூலமும் பெற்றுக் கொள்ள முடியும். இதை விட நீங்கள் வாழும் இடங்களிலும் தோட்டங்கள் வயல்களிலும் எலிகளைப் பெருக விடாது பாதுகாத்து கொள்ள வேண்டும்.



எலிப்பாசனம், எலிப் பொறி என்பவற்றைப் பயன் படுத்த லாம். எலிகளைக்கொள்ளும் பாம்பு கள், ஆந்தை, உடும்பு, கபரகொயா போன்ற விலங்குகளை அழிக்கக் கூடாது.எனவே மேற்குறிப்பிட்ட வழி முறைகளைக் கடைப்பிடிப்பதன் மூலம் எலிக்காய்ச்சலிருந்து எம்மைப் பாதுகாத்துக்கொள்ளமுடியும்.

**Dr.S.கேதீஸ்வரன்,**
**பொதுவைத்தியநிபுணர்,**
**யாழ்.போதனா வைத்தியசாலை.**

# வடமாகாண செயற்பட்டு மகிழ்வோம் போட்டியில்

## சென்.பற்றிக்ஸ் இரு பிரிவுகளில் சம்பியன்





வடமாகாண செயற்பட்டு மகிழ்வோம் போட்டிகளில் சென். பற்றிக்ஸ் கல்லூரி 2 முதலிடங்களையும் மூன்றாமிடமொன்றையும் பெற்றுள்ளது.

வட மாகாண கல்வித் திணைக்களத்தினால் கடந்த செவ்வாய்க்கிழமை கிளிநொச்சி பொது விளையாட்டு அரங்கு மைதானத்தில் ஆரம்பப்பிரிவு மாணவர்களுக்கான மாகாணமட்ட செயற்பட்டு மகிழ்வோம் போட்டிகள் இடம்பெற்றன.

இதன் போது தரம் 4 மற்றும் 5 ஆகிய பிரிவுகளில் முதலிடமும் தரம் 3 பிரிவில் மூன்றாமிடத்தினையும், சென்.பற்றிக்ஸ் கல்லூரி மாணவர்கள் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(6-8)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## யாழ்.சிறை...

சேர்ந்த 40 வயதான இரத்தினசிங்கம் சந்திரகுமார் என்பவரே உயிரிழந்தவரா வார்.

யாழ்ப்பாண சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று வியாழக்கிழமை யாழ். நீதவான் நீதிமன்றில் நடைபெறும் வழக்கு விசாரணைக்காக சிறையிலிருந்து வாகனத்தில் அழைத்து வரும் வேளை திடீரென மயங்கி விழுந்துள்ளார்.

உடனடியாக அவரை சிறைச்சாலை உத்தியோகஸ்தர்கள் வைத்தியசாலைக்குக் கொண்டு சென்ற வேளை அவர் உயிரிழந்துவிட்டதாக வைத்தியர்கள் தெரிவித்தனர்.

அதனையடுத்து சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ள நிலையில், உடற்கூற்றுப் பரிசோதனைக்குப் பின்னர் உயிரிழப்புக்கான காரணம் தெரியவரும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ம-7,33)


மஹஜன சம்பத
திகதி 2024.12.12
சீட்டிழுப்பு இலக்கம் 5683
H 0 7 0 6 9 7
அத சம்பத
H 0 6 9 7
சீட்டிழுப்பு இலக்கம் 258
National Lotteries Board

தன நிதானய
திகதி - 2024.12.12
சீட்டிழுப்பு இலக்கம் - 1713
E 01 14 60 71 E
Double Chance 68051

மெகா பவர்
திகதி 12/12/2024
சீட்டிழுப்பு இலக்கம் 2031
Y 12 20 57 63 73
Double Chance 100279

லக்கி 7 VIP
திகதி 2024.12.12
சீட்டிழுப்பு இலக்கம் 509
N 6 7 7 6 0 9 N

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3925
சீட்டிழுப்பு திகதி 12.12.2024
L 24 38 55 60
L 003301

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.12.12
சீட்டிழுப்பு இலக்கம் 992
மேஷம் 29 32 37 44 மேஷம்
089879 50


## விபரீத...

டையயுவதியே வீட்டில் நேற்று வியாழக்கிழமை தூக்கிட்டு உயிரிழந்துள்ளார்.

சம்பவ இடத்துக்குச் சென்ற யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டதன் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (ம-7,60)

## அல்வாயில்...

கிழமை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அதே இடத்தைச் சேர்ந்த கந்தையா கணபதிப்பிள்ளை (வயது-86) என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

வீட்டில் தனிமையில் வசித்து வந்த நிலையில் நேற்றுக் காலையில் அவர் கூக்குரல் இட்டவாறு இருந்துள்ளார்.

பின்னர் சத்தம் கேட்காத இருந்த நிலையில் அயலவர்களால் கிராம அலுவலர் மற்றும் பொதுச் சுகாதார பரிசோதனைக்குத் தெரியப்படுத்தப்பட்டது.

முற்பகல் அங்கு சென்று பார்த்த போது அவர் சடலமாக காணப்பட்டார். சம்பவ இடத்துக்குச் சென்ற பருத்தித்துறை பதில் மரண விசாரணை அதிகாரி திருமதி அன்ரலா வின்சன் தயான் விசாரணை செய்து உடற்கூற்றுப்பரிசோதனை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு பருத்தித்துறை பொலிஸாருக்கு அறிவுறுத்தினார். (ம-7,60)

## ஆற்றில்...

எனும் இளம் குடும்பஸ்தரே இவ்வாறு பலியாகியுள்ளார்.

நேற்று முன்தினம் ஆற்றில் மீன்பிடிக்கச் சென்ற பொழுது வலிப்பு ஏற்பட்டதன் காரணமாக நீரில் மூழ்கி பரிதாபகரமாக உயிரிழந்துள்ளதாக ஆரம்ப விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக தருமபுரம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

## யாழ்.போதனா...

துள்ளது.

வட மாகாணத்தில் காய்ச்சல் காரணமாக இதுவரையில் 7 பேர் உயிரிழந்துள்ள நிலையில், கள நிலைமைகளை ஆராயும் நோக்கில் இந்த வைத்திய நிபுணர்கள் குழாம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு விஜயம் செய்துள்ளது.

இதன்போது, காய்ச்சல் காரணமாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவரும் நோயாளர்களைக் குறித்த வைத்தியர்கள் குழாம் பார்வையிட்டது.

அதேநேரம், காய்ச்சலால் பீடிக்கப்பட்டு, யாழ்ப்பாணம் போதான வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் உயிரிழந்த சிலர் எலிக்காய்ச்சல் காரணமாக உயிரிழந்துள்ளதாகப் பரிசோதனைகளில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக தொற்றுநோயியல் பிரிவின் விசேட வைத்திய நிபுணர் துஷானி தபரேரா தெரிவித்துள்ளார். (ம-7,33)

## இலங்கை...

இந்திய உயர்ஸ்தானிகர் கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரிடம் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் மற்றும் கடற்றொழில் அமைச்சர் ஆகியோருக்கு இடையில் சந்திப்பொன்று நேற்று இடம்பெற்றது.

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா, கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் மற்றும் கடற்றொழில் பிரதி அமைச்சர் ரத்ன கமகே ஆகியோருக்கு இடையில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளதாக இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகராலயத்தின் X தளத்தில் பதிவிடப்பட்டுள்ளது.

இந்தச் சந்திப்பின்போது மீனவர் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது தொடர்பிலான மனிதாபிமான மற்றும் ஆக்கபூர்வமான அணுகுமுறைகள் குறித்து வலியுறுத்தப்பட்டதாக அந்தப் பதிவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை கைது செய்யப்பட்டு சிறையிலுள்ள மீனவர்களை விரைவில் விடுவிப்பது தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

மேலும், வட மாகாண மக்களுக்கான இந்தியாவின் உறுதியான அர்ப்பணிப்புத் தொடர்பிலும் மீன்பிடித் துறையின் அபிவிருத்தி உதவித் திட்டங்கள் தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளதாக இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகராலயத்தின் X தளத்தில் பதிவிடப்பட்டுள்ளது. (ம-7)

## ஊழல்...

கனடா அறிவித்துள்ளது.

ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்கவுடன் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலில் இலங்கை மற்றும் மாலைதீவுக்கான கனேடிய உயர்ஸ்தானிகர் எரிக் வோல்ஷ் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதன் போது ஊழல் மற்றும் மோசடிகளைக் கட்டுப்படுத்துவது தொடர்பில் கனடா அரசாங்கத்தின் அனுபவங்களை இலங்கை அரசாங்கத்துடன் பகிர்ந்து கொள்வது தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (ம-7)

## காய்ச்...

பத்து நோயாளிகள் நோய் தீவிரமாகி யாழ்.வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர். உங்களுக்கு காய்சல், உடம்பு வலி, மூட்டு வலி, கண் சிவப்பாதல், சிறுநீர் கழிப்பது குறைதல், மஞ்சள் போன்றவை ஏற்பட்டால் உடனடியாக மருத்துவ ஆலோசனை பெறுங்கள்.

சேற்று நிலங்களில் வேலை செய்தவர்கள், விவசாயிகள், மீனவர்கள், அண்மைய வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு வெள்ள நீரில் நடந்து திரிந்தவர்கள் பருத்தித்துறை சுகாதார பணிமனையைத் தொடர்புகொண்டு (MOH office), நோய் வருவதற்கு முன் பான மாத்திரைகளைப் பயன்படுத்தி உங்களை உயிராபத்தில் இருந்து பாதுகாத்துக் கொள்ளுங்கள். இவை தடுப்பூசிகள் அல்ல, அன்டிபயட்டிக் மாத்திரைகள். தடுப்பூசிக்கு பயப்படுபவர்கள் கூட அச்சப்படாமல் இதைப் பயன்படுத்தலாம். தேங்கி நிற்கும் நீர் நிலைகளோடு தொடர்புபட்டு ஆபத்தில் உள்ளவர்களை உடனடியாக சுகாதார பணிமனைக்கு (MOH office) அழைத்துப் போங்கள். நீங்களும் யாரோ ஒருவரை மரணத்தில் இருந்து காப்பாற்றலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7,33)


உத்தியோகபூர்வ முடிவுகள்
12.12.2024 வெற்றி வாரம் 391
N 8 8 5 1 2 4
83571
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.27,124,926.40
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2657
சீட்டிழுப்பு திகதி 2024.12.12 தினம் வியாழக்கிழமை
09 29 51 76 Q
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.73,525,788.00

சனிதா
திகதி 12.12.2024 வெற்றி வாரம் 4818
11 29 47 63 R
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.60,159,944.40
74142

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4369
சீட்டிழுப்பு திகதி 12.12.2024 தினம் வியாழக்கிழமை
01 04 18 39 மிதுனம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.4,327,042.40
160232

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
U 29 31 42 65 68
1833
12.12.2024 வியாழக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.558,031,478.80

576
12.12.2024 வியாழக்கிழமை
02 29 37
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.200,000.00

வியாழக்கிழமை
வெற்றி வாரம் 2483
சீட்டிழுப்பு திகதி 2024.12.12
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.53,719,359.20
அத கோட்டிபதி ADA KOTIPATHI
21 25 57 69 L
206878


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

ஐக்கிய மனித உரிமைகள் பேரவை - இலங்கை
A9 Road, Anandapuram, Killinochchi, Srilanka. Contact : 077 571 2883

## யுத்த சூழல் காரணமாக சொத்துக்களை இழந்தவர்களுக்கான இழப்பீடு தொடர்பான கொடுப்பனவு

இறுதி யுத்தகால இடப்பெயர்வின் போது தமது சொத்துக்களை இழந்து பொதுமக்கள் நட்ட ஈட்டுக்காக கிளிநொச்சி மாவட்டத்தில் விண்ணப்பித்துள்ள பதினையாயிரம் விண்ணப்பங்களில் ஆயிரத்து முந்நூறு கோவைகளுக்கான கொடுப்பனவுகள் குறைபாடுகள் காரணமாக இழப்பீட்டுக்கான அலுவலகத்தில் உள்ளதாகவும் ஏனையோர்களுக்கு கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளதாகவும் உரிய அதிகாரிகள் மூலம் தகவல் கிடைக்கப்பெற்றுள்ளது. எனவே விண்ணப்பித்து இதுவரை இழப்பீடு கிடைக்காதவர்கள் கிளிநொச்சி மாவட்ட செயலகத்திலுள்ள இழப்பீட்டுக்கான அதிகாரியை **076 778 4372** என்னும் இலக்கம் கொண்ட தொலைபேசி மூலமாகவோ அல்லது நேரடியாகவோ தொடர்புகொண்டு கோவைகளை சரிசெய்து கொடுப்பனவைப் பெற்றுக் கொள்ளவும்.

**செ.ஜோன்பப்ரீஸ்**
**மாவட்ட பணிப்பாளர் - கிளிநொச்சி,**
**ஐக்கிய மனித உரிமைகள் பேரவை, ஸ்ரீலங்கா.** (627)

## திருமணத்திற்கு தயாரான இளைஞன் விபத்தில் பலி

அநுராதபுரம் - திருகோணமலை ஏ12 வீதியில் மிகிந்தலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புஞ்சிக்குளம் சந்திக்கு அருகில் நேற்று இடம்பெற்ற வாகன விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மிகிந்தலையில் இருந்து அநுராதபுரம் நோக்கி மோட்டார் சைக்கிளில் பயணித்த குறித்த இளைஞன் மோட்டார் சைக்கிளில் இருந்து தவறிவிழுந்ததில் உயிரிழந்துள்ளதாக மிகிந்தலை பொலிஸார் தெரிவித்தனர்.

மிகிந்தலை - கம்மலக்குளம் பிரதேசத்தில் வசித்து வந்த ஜே.மதுக சங்கீத் ஜயசுந்தர என்ற 27 வயதான இளைஞனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

விபத்தில் உயிரிழந்த இளைஞனுக்கு அடுத்த மாதம் திருமணம் நடைபெறவிருந்த நிலையில் இந்த விபத்து சம்பவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

**V2 VISA SERVICES**
**கனடா**
077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
• கனடா PASSPORT APPOINMENTS
**விமான பயணச்சீட்டுக்கள்**
• Student Visas • Online Appointments
• இந்தியா Visas • Online Visas - All countries
• Police Clearance • Travel Insurance
**Sri lankan Visa Extention**
வெளிநாட்டவருக்கான இலங்கை வீசா நீடிப்பு
(C-1787)

## பணியாளர்கள் தேவை

01. கொடிகாமம் நகரில் அமைந்துள்ள பான்சி கடைக்கு அனுபவமுள்ள காசாளர் ஆண் ஒருவரும் மற்றும் பெண் பணியாளர் ஒருவரும்,
02. வவுனியா செட்டிக்குளத்தில் அமைந்துள்ள தென்னங் காணியை தங்கி நின்று பராமரிக்க பணியாளர் ஒருவரும் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம்
**077 811 8948**
(C-1781)

## சிறிராம் ஜுவல்லர்ஸ்



புத்தாண்டை முன்னிட்டு தங்க ஆபரணங்களுக்கான விசேட சலுகை

22 கரட் தங்க ஆபரணங்களுக்கான செய்கூலி சேதாரத்தில் 20% - 50% வரையிலான விலைக்கழிவு வழங்கப்படும்.

வாங்கும் அனைத்து ஆபரணங்களுக்கும் தரச்சான்றிதழ் வழங்கப்படும்.

**இல.158, 193, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
(C-1772)
077 165 1729, 077 773 0567, 021 222 8334

**PREGNANCY VOUCHER**

கர்ப்பிணித் தாய்மாருக்கான Voucher இற்குரிய பொருட்களை இப்போது Happy Super market உரும்பிராயில் கொள்வனவு செய்யலாம் (வலிகாமம் கிழக்கு பிரதேச செயலகம் - கோப்பாய் பதிவுள்ளோர் மட்டும்)

Happy Super market - உரும்பிராய்
**077 780 8030**
(628)

**Village Hotel**
**Bus Booking (A/C Bus)**
பருத்தித்துறை → கொழும்பு
யாழ்ப்பாணம் → கொழும்பு
இரு வழிச் சேவை (பகல்/ இரவு)
தொடர்புகளுக்கு :
www.villagehotel.lk
**077 544 8503**
(2633)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



மண்ணில் 27 - 08 - 1955
விண்ணில் 13 - 11 - 2024

கடந்த 13.11.2024 புதன்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி

### அமரர் சர்வேஸ்வரலலிதா கமலநாதன்

அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று 13.12.2024 வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, தொடர்ந்து ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் மதிய போசன நிகழ்வும் நடைபெறும். இந் நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

எங்கள் அன்புத் தெய்வம் அவர்களின் மறைவுச் செய்தி அறிந்து எமது இல்லத்திற்கு நேரில் வந்தும் மற்றும் உலகின் பல பாகங்களில் இருந்தும் தொலைபேசி வழியாகவும் மற்றும் சமூக இணையத்தளங்கள் ஊடாகவும் எம்மை அழைத்து அனுதாபத்தைத் தெரிவித்தோருக்கும் மற்றும் நோயுற்றவேளை மிகுந்த கரிசனையுடன் பார்த்த வைத்திய நிபுணர்கள், வைத்திய ஊழியர்கள், மிகுந்த பரிவு காட்டிய உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் நன்றி. மற்றும் அன்னாரின் இறுதி அஞ்சலியில் கலந்து கொண்டோர், கூட நின்று உதவிய அனைத்து நல்ல உள்ளங்களுக்கும் மற்றும் இன்னும் பல வழிகளில் உதவிய அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

ஐயனார் கோவிலடி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில். (619)
தகவல் : குடும்பத்தினர்

## யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில்

இன்று 13.12.2024 முதல் 31.12.2024 வரை

## இந்தியன் செலக்ஷனின்

நத்தார் மற்றும் புதுவருட ஜவுளிக் கொண்டாட்டம்

SPECIAL OFFER



சாறி Offer விசேட விலைக்கழிவு

~~1500/=~~ → 1000/=
~~3000/=~~ → 2000/=
~~3500/=~~ → 2500/=
~~4000/=~~ → 2800/=
~~6000/=~~ → 4000/=

நூற்றுக்கணக்கான டிசைன்களில் சாறிகள், சல்வார்கள், சல்வார் துணிகள், லெஹங்கா, டொப், பார்ட்டி புறெக் என ஏராளமான ஆடைத் தெரிவுகள்

**இம்முறையும் நத்தார், புதுவருடத்தை இந்தியன் செலக்ஷனுடன் கொண்டாடுங்கள்**

காலம் : 13.12.2024 முதல் 31.12.2024 வரை
இடம் : வீரசிங்கம் மண்டபம், யாழ்ப்பாணம்.
(வாரத்தின் 07 நாட்களும் திறந்திருக்கும்) (628)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.12.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.